வார ஏடு ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 9 ★ 30-6-57 சென்னை ★ விலை 16 காசு

கவர்னர் பதவி!

ஜனநாயகக் கேலிக்கூத்து!

——(0)——

வெற்றி பெற்றால் மந்திரி பதவி, தோல்வியடைந்தால் கவர்னர் வேலை.

——(0)——

புதிய பதவிப் பரம்பரைகளை ஆளுங் கட்சியினர் உண்டாக்குகின்றனர்.

——(0)——

பதினேழாவது பதினெட்டாவது நூற்றுண்டுகளில் ஐரோப்பாவில் மன்னர் பரம்பரைகள் கோலாகலமாக ஆண்ட காலத்தில், பட்டம் பதவிகள் வழங்கும் பழக்கம் இருந்தது. மன்னனுக்கு வேண்டியவர்களும், மன்னனுடைய பிரிய சீமாட்டிக்கு வேண்டியவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு அரசாங்கப் பதவிகள், அல்லது பிரபுப் பட்டங்கள் தரப்படும், அவைகள் கிடைத்தால் ஏராளமான வருமானம் கிடைக்கும். பதவியும் பட்டமும் வருமானத்துக்கு வழிகளாக இருந்தனவேயன்றி, அதனால் அவர்களுக்கு வேலை எதுவும் கிடையாது. வெறும் ஆடம்பரத்துடன், அரண்மனை விருந்துகளில் கொலுப் பொம்மைகள் போல வந்து போனால் போதுமானது. இவ்வாறு பொறுப்பு இல்லாத, வேலையில்லாத, நாட்டுக்குப் பயன் இல்லாத, ஆனால் மக்கள் வரிப்பணத்திலிருந்து ஏராளமாகச் செலவாகிற பட்டம் பதவிகள் பிரெஞ்சு நாட்டில் ஏராளமாக இருந்தன. அந்தப் பதவிகளுக்குப் போட்டியிட்ட படி பிரபுக்கள் பலர் இருப்பார்கள். பிரபுக்கள் பரம்பரையினருக்கு ஏதாவது தந்தாக வேண்டுமென்பதற்காகப் பதவிகள் உண்டாக்கப்படுமாம். அதேபோல் இந்திய வரலாற்றிலும், ஆளுபவர்களுக்கு வேண்டியவர்களுக்கு உதவ ஜாகிர்கள் ஜமின்கள் வழங்கப்பட்டன பதவிகளுக்காகவே ஒரு பரம்பரை வளர்க்கப் பட்டு வந்தது.

இந்தியாவில் தற்காலத்தில், ஆளுங்கட்சியினரின் வேண்டியவர்களுக்குத் தரப்படுவதற்காகச் சில பதவிகள் வைக்கப் பட்டுள்ளன. அவற்றில் மிகக் குறிப்பிடத் தக்கது கவர்னர் பதவி! போர்போன் மன்னர்கள் காலத்தில் அலங்கார கொலுப் பொம்மைகள் உண்டாக்கப்பட்டதைப்போல, மொகலாயர்கள் காலத்தில் ஜமின்தார்கள் ஜாகீர்தார்கள் ஏற்படுத்தப் பட்டதைப்போல, இந்திய அரசியலில் கவர்னர்கள் நியமிக்கப் படுகிறார்கள்.

இந்தக் கவர்னர்களுக்குத் தனிப்பட்ட வேலை என்னவென்றால், எதுவுங் கிடையாது. ஊர்களில் ஏதாவது விழா வேடிக்கை என்றால் தலைமை வகிக்கவும், பிற நாட்டார் யாராவது வருகிறார்களென்றால் விருந்து வைத்து உபசாரம் செய்யவும் அந்தப் பதவிகள் பயன்படுகின்றன. இவ்வாறு ஒய்யாரமாக ஊர்சுற்றி வரவும், ஒழிந்த வேளைகளில் ராஜபவனத்தில் உல்லாச விருந்து தரவும் கவர்னர்கள் மும்முரமாயிருக்கின்றனர், அதைத்தவிர வேறு குறிப்பிட்ட வேலை அவர்களுக்குக் கிடையாது. தங்களுக்கு வேலை எதுவும் இல்லை என்று குறைப்பட்டு முன்பு சென்னை மாநிலக் கவர்னராக இருந்த ஒருவர் ஒப்புக்கொண்டுள்ளார், ஆனால், வேலை எதுவும் இல்லையென்ற போதிலும், ஆண்டு ஒன்றுக்கு மட்டும் பத்து லட்சம், பதினைந்து லட்சம்என்று மக்களின் வரிப்பணம் அவர்களுக்காகச் செலவிடப் படுகிறது.

மற்றொன்று ஜனநாயகம் கேலிக் கூத்தாக்கும் முறையில் இந்தியாவில் கவர்னர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மந்திரியாக இருந்த ஒருவர் பொதுத்தேர்தலில் வெற்றி

(12-ம் பக்கம் பார்க்க)

மன்னனுக்குத் தடை!

இங்கிலாந்து நாட்டில் பாராளுமன்றம் மிகவும் பெருமையுடன் போற்றி வளர்க்கப்படுகிறது. இங்கிலாந்து அரசியல் ஆட்சிப்பகுதி பாராளுமன்ற முறையின்மீது கட்டப் பட்டிருக்கிறது.

இங்கிலாந்து மன்னனோ, அரசியோ புகமுடியாத இடம் ஒன்று இருக்கிறதென்றால், அது பாராளுமன்றம்தான். அவ்வாறு பாராளுமன்றம் ஒரு தடையை விதித்திருக்கிறது. இந்தத் தடை மூன்று நூற்றுண்டுகளுக்குமுன் ஏற்படுத்தப் பட்டது. 1642ல் முதலாவது சார்லஸ் மன்னன் தனக்கு எதிராக இருந்த ஐந்த பாராளுமன்ற உறுப்பினர்களை, கைதுசெய்ய போர்வீரர்களுடன் பாராளுமன்றக் கட்டிடத்துக்குள் அவனே வந்தான். அந்த ஐந்து உறுப்பினர்களும் அரசனுடைய வரிமுறைகளைக் கண்டித்துப் பலமாகப்பேசியதால் அவர்களைத்தண்டிக்க வேண்டுமென்று சார்லஸ் மிகுந்த கோபத்துடன் இருந்தான். போர்வீரர்களுடன் அரசன் வருவது தெரிந்த ஐந்து உறுப்பினர்களும் வேறு வழியாக ஓடிவிட்டார்கள். அரசன் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தபோது அவர்களைக் காணோம். "பறவைகள் பறந்துவிட்டனவோ!" என்று சலிப்புடன் அரசன் திரும்பினான். அதற்குபின் அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் நீண்டபோர் ஏற்பட்டது. அரசன் கைது செய்யப் பட்டு, சிரச்சேதத்துக்கு ஆளாக்கப் பட்டான். அது நீண்ட கதை.

உறுப்பினர்களைக் கைது செய்ய வீரர்களுடன் அரசன் நேரில் வந்து போனபின், மறுதடவை பாராளுமன்றம் கூடியபொழுது மக்கள் பிரதிநிதிகள் மன்றம் உரிமையுடன்கூட வேண்டுமென்றால் அரசன் தலையீடு இருக்கக்கூடாது எனக்கருதியது. ஆக பாராளுமன்றக் கட்டிடத்துக்குள் அரசன் நுழையக்கூடாது என்ற தடையை ஏற்படுத்தியது. அதேவிதத்தடை பிரபுக்கள் சபையினருக்கும் இருக்கிறது. இன்றைக்கும் அரசனோ, அரசியோ, பாராளுமன்றத்திற்குள் நுழையமுடியாது.

ஆண்டுதோறும் ஆரம்பத்தில் பாராளுமன்றம் பிரபுக்கள் சபை இரண்டையும் ஒன்றாகக் கூட்டி, இங்கிலாந்து மன்னர் சொற்பொழிவு ஆற்றுவார். இங்குள்ள குடியரசுத் தலைவர் சொற்பொழிவு, கவர்னர் சொற்பொழிவு அதைப் பார்த்து வைக்கப்பட்டதே! அவ்வாறு சொற்பொழிவாற்ற மன்னர் பிரபுக்கள் சபைக்கு வருவார், பாராளுமன்ற உறுப்பினர்களை அங்கு வரும்படி அழைக்க மன்னரின் பிரதிநிதி ஒருவன் ஒரு கருப்புநிறக் கோலுடன் பாராளு மன்றத்துக்கு வருவான். அவன் கட்டிடத்தின் வாயிற்படிக்கு அருகில் வந்ததும், அவன் முகத்திலடித்தாற்போல் பாராளு மன்றத்தின் கதவுகள் சாத்தப்படும். மன்னனின் பிரதிநிதி பலதடவைகள் தட்டித் திறக்கும்படி கேட்பான். பின் சபைத்தலைவர் அனுமதி வழங்குவார்; கதவு திறக்கப்பட்டு, மன்னனின் பிரதிநிதி உள்ளே அனுமதிக்கப்படுவான். இரண்டு சபைகளையும் சேர்த்து உரையாற்ற மன்னர் விரும்பும் செய்தியை மன்னரின் பிரதிநிதி அறிவிப்பான், அதை பாராளுமன்றத்தினர் ஏற்றுக்கொண்டு, அவனைத் திருப்பியனுப்புவார்கள்.

(11-ம் பக்கம் பார்க்க)

ஹங்கேரிய எழுச்சி!

எழுவீர் வீரர்களே! அழைக்கிறது தாயகம்!
விடுதலை வந்தது, விலங்கினை ஒடிப்பீர்!
அடிமைத் தளையா? விடுதலை வாழ்வா?
எதுவெனக் கேட்கும் நன்னாள் வந்தது!
உறுதி கொள்வோம், உறுதி கொள்வோம்!
அடிமைகள் ஆகோமென உறுதி கொள்வோம்!

இந்தப் புரட்சிக் கவிதையை அலெக்சாண்டர் பெட்டோபி என்ற ஹங்கேரிய நாட்டுக் கவிஞர் ஒரு நூற்றாண்டுக்கு முன்பாகப் பாடினார். அவர் பாடிய காலத்தில் ஹங்கேரி ஆஸ்திரியப் பேரரசுக்கு அடிமைப்பட்டு கிடந்தது.

19ம் நூற்றாண்டின் மத்தியில் ஆஸ்திரியப் பேரரசு பலமாக விளங்கியது. ஒரு புறம் ஆட்டிப் படைக்கும் ஆஸ்திரியாவின் கடும்பிடி, மற்றொரு புறம் அகப்பட்டதை விழுங்கக் காத்துக்கொண்டிருந்த ஜாரரசின் வல்லரசு! இரண்டு வல்லரசுகளின் கடும் பார்வையில் ஹங்கேரி தத்தளித்தது. இரண்டு பேரரசுகளும் ஒன்றையொன்று சந்தேகத்துடன், பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருந்த போதிலும், அடிமைப் பட்டிருக்கும் ஹங்கேரி விடுதலை பெற முயன்றால் இரண்டு பேரரசுகளும் ஒன்றுபட்டு அந்த நாட்டை அடக்க முற்படும். ஹங்கேரி நாட்டில் கிளர்ச்சி மூண்டால், ஒரு புறம் ஆஸ்திரிய அரசாங்கம் பெரும் பட்டாளங்களை அனுப்பி மக்களைக் கொன்று குவிக்கும். மற்றொரு புறம் ஜாரரசர் தமது ருஷியப் பட்டாளங்களை ஏவி, கிளர்ச்சியை நசுக்கி விட உத்தரவிடுவார். மக்கள் எழுச்சியை அடக்க, மகராசர்கள் இருவரும் ஒற்றுமையாயிருந்தனர். 1848ல் உண்மையாகவே அவ்வாறு நடந்தது.

அந்தச் சமயம் ஐரோப்பா கண்டத்தில் ஆங்காங்கு புரட்சி தலைதூக்க ஆரம்பித்தது. கொடுமைக்காளான மக்கள் கொதித்தெழுந்தது, கோலோச்சும் மன்னர் பலர் மகுடமிழந்து, மண்டலமிழந்து, நாட்டை விட்டு ஓடும்நிலை பிறந்தது, பாரிசு நகரில் மூண்ட மக்கள் எழுச்சிக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல், நெப்போலியனுக்குப் பின் ஆண்டு வந்த மன்னர் பரம்பரையினர் தலைநகரை விட்டு ஓடிவிட்டார்கள். அரசு மக்கள் கையில் விழுந்தது. அதேபோல் ஆஸ்திரியப் பேரரசின் தலைமைப் பீடமாக இருந்த வியன்னா நகரில், மக்கள் புரட்சி தோன்றியது. சாம்ராஜ்யத்தின் தலைநகரிலேயே புரட்சி தோன்றியதென்றால் அந்தச் செய்தி அடிமைப்பட்ட நாடுகளில் புதிய உற்சாகத்தைஉண்டாக்கியது. வியன்னாவில் புரட்சி மூண்ட செய்தியைகேட்டு ஹங்கேரியில்மக்கள் கிளர்ச்சிக்குத் தயாரானார்கள். அந்த நேரத்தில் அலெக்சாண்டர் பெட்டோபி என்ற கவிஞன் ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட விடுதலைக் கவிதையைப் பாடினான். பெட்டோபியின் கவிதை, நாட்டின் விடுதலை கீதமாயிற்று. பல்லாயிரக்கணக்கான வாலிபர்கள் பெட்டோபியின் கவிதையைப் பாடிக் கொண்டு வெளிவந்தனர். பெட்டோபியின் கவிதையைக் கூறிக்கொண்டு தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைத் தாலாட்டினார்கள், பெட்டோபியின் கீதத்தை இசைத்த வண்ணம் நாட்டின் விடுதலைப் படையினர் திரண்டனர், "அடிமைகள் ஆகோமென உறுதி கொள்வோம்" என்று அந்தக் கவிதையைக் கூறி சூளுரைத்தனர், அந்த விடுதலை கீதத்தை இசைத்தவண்ணம் விடுதலை வீரர்கள் அடக்குமுறையை எதிர்த்து நின்றார்கள், ஆஸ்திரியப் படைகளையும், ஜாரின் படைகளையும் போராடினார்கள், குண்டு அடிபட்டும், படுகாயத்துக்கு ஆளாகியும், கொட்டும் குருதியுடன் போர்க்களத்தில் விழுந்த நேரத்திலும் "எழுவீர் வீரர்களே! அழைக்கிறது தாயகம்!

அடிமைகள் ஆகோமென உறுதி கொள்வோம்!" என்ற கவிதையை அவர்கள் உதடுகள் முணுமுணுத்த படிதான் இருந்தன. ஆஸ்திரியப் பேரரசின் பிடியிலிருந்து விடுபட ஹங்கேரி நடத்திய போராட்டத்தில், பெட்டோபி பாடியது விடுதலை கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அது ஒரு நூற்றாண்டுக்கும் முன்னதாக! இப்பொழுது ஆஸ்திரிய சாம்ராஜ்யம் இல்லை, வலிவிழந்த நாடுகளில் ஒன்றாக ஆஸ்திரியா இருக்கிறது. ஹங்கேரி அடிமைதளையிலிருந்து முன்பே விடுபட்டு விட்டது. இருந்தாலும் சென்ற நூற்றாண்டின் மத்தியில் இசைக்கப்பட்ட விடுதலைக்கீதம் மீண்டும் ஹங்கேரியில் இப்பொழுது பாடப்பட்டது. காரணம் புதிய சாம்ராஜ்யம் ஒன்று அந்த நாட்டின் உரிமைகளில் தலையிட்டது!

1956 அக்டோபர் மாத இறுதியில் ஹங்கேரியின்மீது ருஷியாவுக்குள்ள பிடிப்பை எதிர்த்து அந்த மக்கள் கிளர்ச்சி எழுந்தது. ஆனால் ருஷியப் படைகளின் வரவால், அந்தக் கிளர்ச்சி நசுக்கப்பட்டு, கடுமையாக அடக்கப்பட்டுவிட்டது.

ஹங்கேரிய கிளர்ச்சிபற்றிய விவரங்களைக் கண்டறிய ஐக்கிய நாடுகளால் நிறுவப்பட்ட விசாரணைக்குழு தனது அறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளது. அந்தக் குழுவில் டென்மார்க், இலங்கை, துனிசியா, உருகுவே, ஆஸ்திரேலியா ஆகிய ஐந்து நாட்டுப் பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர். முழு உண்மையைக் கண்டறிய அவர்களால் முடியவில்லையென்ற போதிலும். அவர்களால் முடிந்தவரை விசாரணைகளை நடத்தி, கிடைத்தவிவரங்களைத் தொகுத்து, தாங்கள் முடிவுகளை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். ஹங்கேரிய மக்களின் எழுச்சி வரலாறு மிகச் சுருக்கமாகப் பின் தரப்படுகிறது.

"சர்வாதிகார ஆட்சிக்கு எதிரான சிலகருத்துக்கள் 1955ம் ஆண்டிலேயே ஹங்கேரி நாட்டு எழுத்தாளர்கள் சிலரால் எழுதப்பட்டன. அவர்கள் கைது செய்யப்பட்டு அகற்றப்பட்டனரென்றாலும், எதிர்ப்புக் கருத்துக்களும் மக்களுக்குள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் தன்மையும், அதை ஒட்டிய விவாதங்களும் வளர ஆரம்பித்தன. சென்ற ஆண்டு கோடைக் காலத்தில், கம்யூனிசுட் வாலிபர் குழுவினரால் பெட்டோபி சங்கம் எனப் புதுஇளைஞர் விவாத மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. வரவர, அந்தச் சங்கத்தில் மக்களுடைய குறைபாடுகளும், ஆட்சிமுறை பற்றிய கருத்துகளும் விவாதிக்கப்பட்டது.

1956 அக்டோபர் 23,24 தேதிகளில் சோவியத் படைகள் ஹங்கேரிக்குள் நுழைந்து கிளர்ச்சியை அடக்க முற்பட்டனவென்றாலும், அக்டோபர் 20-22 தேதிகளில் சோவியத் அதிகாரிகள் ஹங்கேரிக்குள் நெருக்கடியை எதிர்பார்த்து படைகளுடன் தலையிடுவதற்குத் தயாராக இருந்திருக்கின்றனர் என்பது தெரிகிறது.

அக்டோபர் 22ந்தேதி ஹங்கேரியின் தலைநகரிலிருக்கும் தொழிலியல் பல்கலைக்கழக மாணவர்கள் 16 வேண்டுகோள்கள் அடங்கிய அறிக்கையைப் பற்றி கூட்டங்களில் பேசினார்கள். அந்த வேண்டுகோள்களில் முக்கியமானவை ஹங்கேரிய நாட்டிலிருந்து சோவியத் படைகளைப் போகச் செய்வது, இம்ரே நாகி தலைமையில் புது அரசாங்கம் அமைப்பது, சுதந்தரமான தேர்தல்கள், பேச்சு சுதந்தரம், அரசியல் கட்சிகள் இயங்க அனுமதித்தல், உழவர்கள் தொழிலாளர்கள்குறைகளைப் போக்குதல். இவ்வாறு பல பிரச்சினைகள் அந்த மாணவர் வேண்டுகோளில் இருந்தது.

அதற்கு மறுநாள், 1848-49 ஹங்கேரி விடுதலைக் கிளர்ச்சியில் புகழ் பெற்ற பெம் என்பவர் நினைவுக்காக வர விருந்த ஊர்வலத்துக்கு அரசாங்கம் தடை விதித்திருந்தார்கள். அரசாங்கத்தின் தடையை மீறி ஆயிரக்கணக்கான வாலிபர்கள் ஊர்வலம் வந்தார்கள். ஊர்வலம் பாதிவந்ததும் தான் விதிக்கப்பட்டிருந்த தடையை அரசாங்கம் நீக்கியது. மாணவர்கள், தொழிலாளர்கள், போர்வீரர்கள் பலரும் அந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். ஹங்கேரிய பாராளு மன்றக் கட்டிடத்தின் எதிராக ஊர்வலம் வந்தபொழுது மாலை மணி 6 ஆகியது. அங்கு 2 அல்லது 3 லட்சம் வரை மக்கள் கூட்டம் நிறைந்தது. கூட்டத்தினர் ஆர்ப்பாட்டம் செய்ததின் பேரில், முதலமைச்சர் இம்ரேநாகி வெளிவந்து சமாதானங்கூறி பேசினார். அடுத்தபடியாகக் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசி எர்னோகேரோ பேசும்பொழுது கூட்டத்தில் சிறிது எதிர்ப்பு வந்தது.

அந்தச் சமயத்தில் மற்றொரு பகுதியில் மக்கள் கூட்டமாகப் பிரிந்து சென்று, ஊர் நடுவிலிருந்த ஸ்டாலின் சிலையைக் கவிழ்த்துவிட்டார்கள். அந்தக் கூட்டத்தில் பெரும்பாலும் மாணவர்கள் கூடியிருந்தார்கள்.

அக்டோபர் 23ந்தேதி மாணவர்களின் கூட்டமொன்று அரசாங்க ரேடியோ நிலையத்திற்குச்சென்று, தங்களுடைய அறிக்கையை ஒலிபரப்புவதற்குள்ள தடையை நீக்கும்படி வாதாடிக் கொண்டிருந்தார்கள். வெளியில் கூட்டம் காத்துக் கொண்டிருந்தது. உள்ளே சென்ற பிரதிநிதிகளில் ஒருவர் சுடப்பட்டுவிட்டதாக வதந்தி வெளியே உலவ ஆரம்பித்தது. கூட்டம் பரபரப்புடன் காணப்பட்டது. திடீரென்று இரவு 9 மணிக்கு, கட்டிடத்தினுள்ளிருந்து கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன, அதையடுத்து ஹங்கேரிய அரசாங்கத்தின் இரகசியப் போலீசுப் படை தோன்றி சுட ஆரம்பித்தது. பலர் இறந்து விழுந்தார்கள், பலர் படுகாயத்துக்கு ஆளானார்கள். அரசாங்க இரகசியப் போலீசின் மீது மக்களுக்கு முன்னதாகவே நீங்காத வெறுப்பு உண்டு. அதிலும் ஆதரவற்று இருந்த மக்கள் மீது முரட்டுத்தனமாக அவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது மக்களின் ஆத்திரத்தை மூட்டியது. அதுவரை அமைதியாக இருந்த கூட்டம் பலாத்கார கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தது. இரகசியப் போலீசை எதிர்த்து, மக்கள் தாக்கினார்கள். அதைச் சமாளிக்க, இராணுவம் அழைக்கப்பட்டது. ஆனால் வந்த இராணுவத்தினர் மக்கள் பக்கம் சேர்ந்து கொண்டார்கள்.

இதற்குள்ளாக இரகசியப் போலீசுக்கும் மக்களுக்கும் நடக்கும் மோதலைக் கேள்விப்பட்டு, தொழிற்சாலைப் பகுதிகளிலிருந்து தொழிலாளர்கள்

(11-ம் பக்கம் பார்க்க

மன்றம்

ஞாயிறு 30—6—57 சென்னை

இந்தி ஆதிக்கம்!

இந்தி மொழிக்கு அதிக உரிமைகளை வாங்கித் தருவதற்காக, பஞ்சாப் மாநிலத்தில் கிளர்ச்சி நடந்து வருகிறது. இதுவரை இந்தி மொழி வளர்ச்சிக்கு ஆக்கந் தேடியவர்களும், பாடுபட்டவர்களும் பார்த்து, இவர்கள் செய்வதால் இந்தி மொழி வளர்ச்சி தடைப்படுமேயன்றி மேம்பாடு அடையாது என்று பயப்படும் விதத்தில் அந்தக் கிளர்ச்சிக்காரர்கள் காரியங்களை நடத்தி வருகிறார்கள். மேலும், இந்தியாவில் ஆங்காங்கு மொழிக்கிளர்ச்சிகள் தோன்றிய சமயங்களிலெல்லாம், அவையெல்லாம் இந்தி மொழி ஆதிக்கஞ் செலுத்தத் தலைப்பட்ட நேரத்தில் இந்தி அல்லாத மற்ற மொழியினர் தொடுத்த எதிர்ப்புகளாகவே அவை இருக்கும். இந்தி மொழியின் ஆதிக்கம், அரசியல் அதிகாரத்தின் மூலம் நிலைநாட்டப்பட்ட நேரத்தில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. இந்தியல்லாத மற்ற இந்திய மொழிகள் பின்னுக்குத் தள்ளப் பட்டு, இந்திக்கு மட்டும் ஏகபோக உரிமை தரப்பட்டு, அலுவலகப் பெயர்ப்பலகைகளிலும் எந்த அளவுக்கு இந்திச் சொற்கள் புகுத்தப்பட முடியுமோ அந்த அளவு வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்டன.

இந்தியத் துணைக் கண்டம் பூராவிலும் இந்தி மொழியின் ஆதிக்கத்தை நிலைநாட்ட டில்லி அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. இந்தி மொழி அடைந்து வருகிற வளர்ச்சி போதாதென்ற கூக்குரல் இந்திப் பிரியர்களிடமிருந்து அவ்வப்பொழுது எழாமலில்லை. உத்திரப் பிரதேசக்காரர்கள், தாண்டன் போன்றவர்களும் இந்தி வெறி பிடித்தவர்களும் இந்தி வேகமாகப் பரப்பப்படவேண்டுமென்று வாதாடினார்கள். இந்திக்குள்ள எதிர்ப்பைக் கண்டு அஞ்சிய காங்கிரசுத் தலைவர்கள் "பொறுமை, பொறுமை!" எனக்கையமர்த்தி வந்தார்கள். ஒரு புறம் மிக அமைதியாக, சந்தடியில்லாமல் இந்தியைப் பரப்பும் முயற்சிகள் நடந்து வருகின்றன.

அரசாங்க அலுவலகங்களின் பெயர்களெல்லாம் இந்தியில் பொறிக்கப்படுகின்றன.

தபால், தந்தி, இரயில்வே நிலையங்களில் இந்திப் பெயர்ப் பலகைகள் தொங்குகின்றன.

கார்டு, கவர், உள்நாட்டு உறை, பணமனுப்பும் தாள், எல்லாவற்றிலும் முழுவதாக இந்தி இருக்கிறது.

செய்திப்படங்களில் இந்தி தவிர வேறு எழுத்துக்கள் காட்டப்படுவதில்லை-. தமிழில் செய்தி சொல்லப்பட்டால் கூட காண்பிக்கப்படுகிற படத்தின் தலைப்புகளும் பிரிவுகளும் முழுவதும் இந்தியில் இருக்கின்றன.

குடியரசுத் தலைவர், மாநிலக்காவலர் இவர்கள் தங்குமிடங்களின் பெயர்களிலிருந்து, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இன்சூரன்சு நிறுவனத்தின் மண்டல, வட்ட பிரிவுகளின் பெயர்கள் வரை எல்லாம் இந்திப் பெயர்களாகவேத் தரப்பட்டுள்ளன.

இராணுவத்தில் உபயோகப்படுத்தப்படும் சொற்கள் எல்லாம் இந்தியாக்கப்பட்டுவிட்டன.

அரசாங்க உத்தியோகங்களில் இந்தி படிக்கவேண்டுமென வற்புறுத்தப் படுகிறது.

இந்திய ரேடியோ இந்தி ரேடியோவாகக் காட்சியளிக்கிறது. சம்பந்தமில்லாத கிளைகளிலும் நேரங்களிலும் இந்தி நிகழ்ச்சிகள் புகுத்தப்படுகின்றன.

இந்திக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்படுகின்றன.

இந்திப் பிரசார சபைகள், மிகுந்த வளத்துடன் அரசாங்க ஆதரவுடன் நாடெங்கும் காணப்படுகின்றன.

இந்திய துணைக் கண்டத்தை இந்தி மயமாக்கும் பெரு முயற்சி நடைபெற்று வருகிறது.

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இந்தி மொழி அல்லாதவர்கள், இந்தியை விட வளம் பொருந்திய மொழிக்காரர்கள், இந்தி மொழியினருடன் எந்த வகையிலும் தொடர்பு இல்லாத தென்னாட்டினர்! இந்தி ஆதிக்கம் வெளிப்படையாகக் கட்டாயப்படுத்திய நேரத்தில் தென்னாட்டிலிருந்து எதிர்ப்பு வந்தது. வெளிப்படையாகத் திணிக்கப்படும் முறை தவிர்க்கப்பட்டு, மெதுவாக இந்தி நுழைக்கப்படுகிறது.

இப்பொழுது பஞ்சாபில் மூண்டுள்ள கிளர்ச்சி, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தல்ல, இந்திக்கு இன்னும் அதிகப்படியான ஆதிக்கம் வேண்டுமென்று! பஞ்சாப் மாநிலத்தில் குர்முகி எழுத்தில் உபயோகப்படும் பஞ்சாப் மொழிக்கும், தேவநாகரி எழுத்தில் வழங்கப்படும் இந்திக்கும் போட்டி உண்டாக்கப்படுகிறது. அதில் தேவநாகரி எழுத்தில் வரும் இந்திக்கு ஆதரவாகக் கிளர்ச்சிக்காரர்கள் "இந்தி ரட்சக சமிதி"களை உண்டாக்கி, சண்டை தொடுத்துள்ளார்கள்.

பஞ்சாபில் மூண்டுள்ள மொழிச் சண்டையில் மற்றொரு புதுமை என்னவென்றால், இது வரை மொழிச்சண்டை அரசியல் உலகில் போராட்டங்களை உண்டாக்கியது. இந்த பஞ்சாப் மொழிச் சண்டையில் ஈடுபட்டிருப்பவர்கள், சந்நியாசிகள்! ஆரிய சமாசம் என்ற மதச்சார்புடைய சங்கத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் இந்தி ஆதரிப்புக் கிளர்ச்சியைத் துவக்கியுள்ளார்கள்.

பொதுவாகத் தென்னாட்டை விட வடநாட்டில் சந்நியாசிகளுக்கு மக்களிடை மதிப்பு அதிகம். காவியணிந்து, சாம்பலைப்பூசி, கமண்டல மேந்திக்கொண்டு ஒருவன் புறப்பட்டால், அவனுடைய காலடியில் விழுந்து ஆசிர்வாதத்தைப் பெற பலர் காத்திருப்பார்கள். மக்களை விரைவில் தூண்டிவிடக்கூடிய வலிமையை அந்த மதச் சாமியார்கள் பெற்றிருக்கின்றனர். அத்தகைய சந்நியாசிக் கூட்டத்தினர் மொழிப்பிரச்சினையை கூறி, இன்று அரசியலில் பிரவேசித்துள்ளனர்.

அவர்கள் கிளர்ச்சியை நடத்தும் விதத்தைப் படித்தாலே, மத ஆதிக்கம் அரசியலில் தலைப்படுவதை உணரலாம். "அரசாங்க அலுவலகத்தின் முன் வேதமந்திரங்களை உச்சரித்துக்கொண்டு, தபசு புரியும் கோலத்தில் சாமியார் சென்றார்!" என்று இந்தி ரட்சக சமிதித் தலைவர்கள் செல்வதைப் பத்திரிக்கைகள் குறிகின்றன.

இந்தியைப் பரப்புவதில் இத்தகைய "வெறித்தன்மை" கூடாதென இந்தி ஆதரவாளர்களே கூறுகின்றனர். பண்டித நேரு அவர்களும் இந்தி ரட்சக சமிதி தலைவருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியுள்ளார்.

இந்தியைப் பரப்பப் போடப்பட்டுள்ள திட்டமே, வெறித் தன்மையில் ஏற்பட்டதாகும், இந்தியா முழுவதையும் ஒரே மொழிக்கீழ் கொண்டு வரவேண்டுமென்ற ஏகாதிபத்திய மனப்பான்மை வெறித்தன்மையைத் தூண்டுகிறது. அந்த பஞ்சாபில் அந்த வெறித்தன்மை வெளிப்படையாகத் தலை தூக்கி ஆடுகிறது. பஞ்சாபில் காணப்படுவது, நோயின் ஒரு அம்சமே! நோயின் வெளிப்பார்வையைத் தீர்க்க முயல்வதால், நோயின் தன்மையைத் தீர்க்க முடியாது! அடிப்படைக் கொள்கையான இந்தி ஏகாதிபத்தியக்கொள்கை தவிர்க்கப்பட்டால் தான், பஞ்சாபில் மூளும் மொழிச் சண்டைகளைத் தவிர்க்க முடியும்.

அந்தந்த மொழிக்குரிய உரிமையைத் தருவதால் மட்டுமே அமைதியான சூழ்நிலையை இந்திய உபகண்டத்தில் உண்டாக்கமுடியுமே தவிர, மொழி என்ற ஏகாதிபத்திய வெறியுடன் இந்தியைப் பரப்ப முற்பட்டால், தொலையாத சச்சரவுகளின் இருப்பிடமாக இந்தியா ஆகும்.

போதனை புரிந்தது மத்திய அரசு!

…ாளமுடியாத வரிச்சுமை …ல் மக்கள் தாக்கப்பட்ட …ழுது, வரி, வரி, என்று …ரசாங்கம் வாட்ட விழிப் … மக்கள் இதயத்தில் …பக்கனல் உருவாகிவிட்ட …, பாராளுமன்றத்தில் திரு … இராசகுமாரி அமிர்த …ௌரி, கிருபளானி ஆகியோ…, நாடாளும் காங்கிரசுக் கட் … கூட்டத்தில் அதன் …துச் செயலாளர் திரு. …ராயணன் அவர்களும் 'வீண் …லவு கூடாது, ஆடம்பரம் …லவேண்டும், சிக்கனமாய் …ழவேண்டும்' என்றெல் …ம் எடுத்துக்காட்டி இடித் … கூறியபிறகு, காங்கிரசுக் …ர்களின் சிந்தனையை, சிக் …னமாய் வாழவேண்டும் என்ற … எண்ணம் இலேசாக …ட்டுப் பார்த்திருக்கிறது. …மைச்சர்களின் சம்பளத் …ாகை குறைக்கப்பட வேண் … என்று காங்கிரசுக்கட்சி …ற்குழுக் கூட்டத்தில் … த் து தெரிவிக்கப்பட்ட …ழுது பண்டித நேரு அது …ாது என்பதற்குப் பல கார …ங்களைக் கூறினர். கூறிய …ழுது நாட்டு நிர்வாகத் …லே தான் கொண்டுள்ள …லட்சியத்தையும் வெளிகாட் … கொள்ளத் தவறவில்லை. …க்கு சம்பளம் எவ்வளவு …பது எனக்கே தெரியாது,' …று கூறிய அவர் அதற்கு …பாக மே திங்கள் 17ம் நாள் …லியில் பாரதீய வித்யாபவ… என்னும் நூல் வெளி…ட்டகத்தைத் திறந்து …த்தபோது "அலுவலகங் … நிறைந்த காடுபோல் இருக் …து டில்லி. இந்தப் பத் …ாண்டுகளில், இந்தக்காட்டில் …ன்ன நடக்கிறதென்று என் …ல் புரிந்துகொள்ள முடிய …லை" என்று குறிப்பிட்டுள் …ர். அகிலஉலக கண்ணேட்ட…, உலகு சுற்றும் போக்கும் …ாண்ட அலகபாத் வீரருக்கு …ட்டின் நிர்வாக நிலையையும் …க்கு வரும் சம்பளத் …தாகையையும் கவனிக்கக் …ட நேரமில்லை. இந்த இலட் …ணத்தில் அரசாங்கத்தின் …வாகச் செலவு 192கோடி …ாயாக உயர்ந்துள்ளது.

…த்தகு சூழ்நிலையில்தான் …க்கனமாக வாழவேண்டும்' …ற நேரு பெருமானின் கட் …ியின் காரணத்தால் காரி…ருக்கும் கொடியை அகற்று…ல், நகரமன்றங்கள் தரும் வர…ற்புகளிலிருந்து விலகி…ருத்தல், சிறியமாளிகைகளில் …யேறுதல், போலீசுக் காவ… குறைத்தல் ஆகிய சில …றைகள்மூலம் செலவைக் …றைக்கப்போவதாக அறிக் …கைகள் பறந்தவண்ணம் உள் …ன. இவையெல்லாம் திரு. …ாமராசர் அண்மையில் நடத் …ிய பாகல்மேடு நாடகத்தின் …று பதிப்புக்களே தவிர …றல்ல. தலையை விட்டுவிட்டு வாலையல்ல வாலின் தும்பி லிருக்கும் "எதையோ" பிடிக் கும்அரசியல் அப்பாவித்தனத் தையே இப்புதிய முறைகள் சுட்டிக்காட்டுகின்றன.

காங்கிரசுக்கட்சி கொலு வேறிய பிறகு காளான்று வெள் ளம் போல் யாருக்கும் பய னின்றி வாரிவிட்ட டம்ப தொகை ஏராளம், ஏராளம். மாளிகை வாங்கியது, கார் வாங்கியது, கம்பளி அனுப் பியது என்று அடுக்கிக் கொண்டே போகலாம். காங் கிரசுக்காரர்களுள் சிலருக்கு,

அதனால்

குறிப்பாக தேர்தலில்மக்களால் தோல்வி முத்திரை பொறிக்கப் பட்டவர்களுக்கு பதவியும் பராக்கும் தருவதற்காகவே ஏற்படுத்தப்பட்ட மாநில ஆளு நர் (கவர்னர்) பதவி ஆண்டு தோறும் பல இலட்ச ரூபாய் களை விழுங்கிவிடுகின்றன. பஞ் சாபில் சண்டிகார் என்னும் இடத்தில் பலலட்ச ரூபாய் களைக் கொட்டி ஒருபுதிய நக ரையே ஏற்பத்தியுள்ளார்கள். வெளிநாட்டுக்காரர்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டு வதற்காக டில்லியில் இரண்டு கோடி ரூபாயில் அங்கிய விருந் தாளிகள் தங்க 'அசோகபவ னம்' அமைத்துள்ளார்கள். கடந்த மார்ச் 29ம் நாள் டில்லி பாராளுமன்றத்தில் தனது அறிக்கையைத் தந்த கணக் குக் குழு வெளி நாடுகளில் விர யமாகும் தொகையைப் பற்றி வேதனையோடு விவரங்களைத் தந்துள்ளது. வெளிநாட்டில் பணியாற்றும் இந்நாட்டு அதி காரி ஒருவர் மாதத்துக்கொரு கார் வாங்கி விற்றதொகை யை அரசாங்கத்துக்குச் சேர்க்காமல் அவரே எடுத்துக் கொண்டுள்ளார். கார் வாங்கிய தொகையைவிட கூடுதல் தொகையைச்சொல்லி அரசாங் கத்திடமிருந்து மேலும் அதிக மான அளவு பணம் பெற்றுள் ளார். சட்டத்தின் முன் நிறுத்தப் படாமலேயே அர சாங்கம் அவருக்குத் தந் துள்ள தண்டனை 'இப்படியெல் லாம் சம்பாதித்த தொகை யைக் கட்டிவிடுக' என்பது தானும்.

பிரிட்டனில் தூதுவராக இருக்கும் பண்டிதரின் தங்கை திருமதி விசயலட்சுமி அம்மை யார் தன் தகுதிக்கேற்ப கொஞ் சம் தாராளமாகவே நடந்துள் ளார். தனது பொருளாதார ஆலோசகரிடம்கூட கேட்காமல் வியாபார விளம்பரத்துக் கென்று 1961வரைக்கும் ஆண் டுக்கு 1500 பவுன் வாடகை கூறி மாளிகை ஒன்றை வாங் கினர். அதற்கு முன்பணமாக தந்த தொகை 4000 பவுன், பழுதுபார்க்க வீசியெறிந்த காசு 6000 பவுன். இத்தனையும் கொட்டியழுதபிறகும் மாளி கையை அவர்கள் கட்டியாள வில்லை: அப்படியே இருக் கிறது. இதுபோல் மாளிகை களை வாடகைக்கொடுப்பதும், பயன்படுத்தாமல் விட்டுவிடு வதுமான நிகழ்ச்சிகள் ஏராளம் உண்டு. அதில் இதுவும் ஒன்று என்று கணக்குக்குழு வேதனையோடுவெளியிடுகிறது. ஐயம் உள்ளோர் கடந்த மார்ச் 30ல் வெளியான இந்து நாளி தழின் 8-ம் பக்கத்தில் நான் காம் பத்தியினைப் பார்ப்பா ராக.

சமூக நல திட்டங்களுக் கென்று 14 கோடி ரூபாயைக் கேட்டு வாங்கி செலவழித்தது போக எஞ்சிய ஏழுகோடி ரூபாயை எப்படி செலவழிப் பது என்று தெரியாமல் திண் டாடுகிறார்களாம். இந்தச் சமூக நலத்திட்டம் எதிர்பார்த்த அளவு வெற்றி தரவில்லை. பணம் பாழாக்கப்படுகிறது என்று பொருளாதார வல்லு நர் திரு. வி. ஆர். கே. வி. ராவ் தலைமையில் அமைந்த ஆய் வுக்குழு அறிக்கை விட்டுள் ளது. அண்மையில் இறந்து போன காங்கிரஸ் முதலமைச் சரின் சொத்துக்களைக் கணக் குப் பார்த்த பொழுது அவர் நிலைமைக்கும் தகுதிக்கும் மிகுதி யான வகையில் 90 இலட்சத் திற்கு இருந்ததாம். இதை யொட்டி மைசூர் சட்ட மன்றத் தில் 'பதவியில் இருந்த, இருக்

பூனையை ஒழித்தது மாநில அமைச்சு!

கிற ஒவ்வொருவருடைய பழைய புதிய சொத்து விபரங் களைச் சேகரிக்க வேண்டும்' என்று ஒரு உறுப்பினர் தீர் மானமே கொண்டு வருகிறார். மே திங்களில் பாராளுமன்றத் தில் பேசியபொழுது திரு. கிரு பளானி; வெளி நாட்டுத் தூது வர் ஒருவர் பதவிமாறி போகும் பொழுது வெள்ளிக் குவளை, தட்டு முதலியவைகளை எடுத் துக்கொண்டு அவைகளுக்குப் பதில் தகரத்தட்டு குவளைகளை விட்டுச் சென்றுள்ளதை எடுத் துக் காட்டியுள்ளார்.

இது போல தாமோதரப் பள்ளத்தாக்கு, சராகுட் அணைக்கட்டுகளிலே, வீணுக் கப்படும் தொகை ஏராளம். பாழாக்குவதற்கென்றே பல கோடி ரூபாய்களை திட்டத்தில் ஒதுக்கியுள்ளார்களாம். அதை யும் மிஞ்சி அதிகமாக பாழாவ தாக தணிக்கைக்குழுஅறிக்கை தருகிறது. இத்தகு முறை யில் ஏற்பட்டுள்ள பணம்பாழா கும் படலத்தை மாற்றியமைக்க முடியாத அரசு 'சிக்கனமாக வாழு' என்று புத்தி போதிக் கிறது. இந்த புத்திசாலிகளின் யோசனையை சிரம்மேல் தாங்கி நடக்கிறது உத்திரப்பிரதேசம். கேட்டோர் சிரிக்கும் அளவிற்கு கீழ் நிலைக்கு வந்துள்ளது நாட்டு நலத்தில் தன் நாட் டத்தை காட்டிக்கொண்டதாக எண்ணிக் கொண்டிருக்கும் அந்த அமைச்சரவை. இதை கேலிச்சித்திரமாக்கி நம்மை விலா நோகச்சிரிக்கவைக்கிறது 'சங்கர்சு வீக்லி' என்ற ஆங் கில ஏடு.

உத்திரப்பிரதேச மாநிலத் தில் பந்தா என்ற ஒரு வீட் டத்தில் (தாலுகா) நடந்த கேலிக்கூத்து இது. பந்தா வட்டப் பணிமனை (தாலுகா ஆபீசு) அங்கேதான் இருக் கின்றது. அரசாங்க ஏடுகளை யும், பணிமனையிலுள்ள குறிப் புச்சுவடி போன்ற காகிதக் கட்டுகளையும் எலி தொலைத்து விடுவதாகக் கண்ட அதிகாரி கள் எலித்தொல்லையை நீக்க வேண்டி பணிமனையில் பூனை ஒன்றை வளர்த்தார்களாம். பூனையின் வரவால் எலித் தொல்லை கணிசமான அள விற்குக் குறைந்தது. ஆனல் 'சிக்கனமாய் வாழு' என்ற நேரு பண்டிதர் செப்பிய போத னையை சிரமேற் தாங்கிய உத் திரப்பிரதேச அமைச்சரவை பூனையை விரட்ட ஆணையிட் டுள்ளது. போதனை புரிந்தார் தலைவர் அதனுல் பூனையை ஒழித்தனர் தொண்டர். எவ் வளவு கேவல நிலை!

நாடாள்வோர் செயலெல் லாம் நல்ல உள்ளம் கொண் டோர்க்கு நகைச்சுவை விருந் தாய் அமைகிறது. கோடிக் கணக்கான தொகை பாழாய்ப் போகிறது பல வழிகளில். அதை கட்டிக் காக்க முடியாத அரசு பூனையை ஒழித்துக்கட்டி தன் புத்திசாலித்தனத்தை அகில உலகிற்கும் பறை சாற்றுகிறது. இவர்களை எண் ணும் பொழுது "அழுவதா இல்லை சிரிப்பதா, இந்த அதி சயமான உலகத்தை எண்ணி அழுவதா இல்லை சிரிப்பதா" என்ற திரைப்படப் பாடல் தான் நினைவிற்கு வருகிறது. இந்த வேதனை புரியிலிருந்து விடுதலை புரிக்குப் பயணம் செல்ல புயல் கிளப்புவோம்! புரட்சி செய்வோம்!

நாஞ்சில். செ. அன்பெழில்

சிறுகதை

அலெக்ஸாண்டர் புஷ்கின்

பனிப் புயல்

[இச்சிறுகதை புகழ்பெற்ற ருஷிய எழுத்தாளரான **அலெக்ஸாண்டர் புஷ்கின்** அவர்களின் சிறுகதை ஒன்றின் மொழிபெயர்ப்பாகும். புஷ்கின் கவி எனப் பெயர் பெற்றபோதிலும், சிறுகதைகள் தீட்டுவதிலும் வல்லவராக இருந்தார். அவர் எழுதிய கவிதைகளும் கதைகளும் இன்றும் ருஷியாவில் பெரிதும் விரும்பிப் படிக்கப்படுகின்றன, கலையுணர்வுடையோரால்.]

காவ்ரில் அந்த ஊரில் பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்தவர். போதுமான அளவு செல்வமும் உள்ள அவரைப் பற்றித் தெரியாதவர் அந்தப் பகுதியில் அதிகப் பேர் இருக்கமாட்டார்கள். ஊரில் ஏதாவது சிறு யோசனை கேட்க வேண்டுமென்றாலும் காவ்ரில் வீட்டுக்குத்தான் கிராம மக்கள் போவது வழக்கம். வருபவர்களை வரவேற்று உபசரிப்பதில் காவ்ரிலின் மனைவியும் பின்வாங்காமலிருந்தாள். காவ்ரில் குடும்பத்திலிருந்த மற்றவர்களைவிட, காவ்ரிலின் பதினேழு வயது மகள் **மேரி** ஊராரின் கவனத்தை அதிகம் கவர்ந்திருந்தாள். மிக நல்ல பெண்ணாகக் கருதப்பட்ட அவள் மீது, பிள்ளையுடைய பெற்றோர்களின் கண்கள் ஆவலோடு மொய்த்தபடி இருந்தன.

மேரி பள்ளிப்படிப்பை முடித்து, நாவல் உலகில் முழுகியிருந்தாள். அதிலும் பிரெஞ்சு காதல் கதைகள் அவள் கருத்தை அள்ளியிருந்தன, கடைசியாக அவளே காதலில் அமிழ்ந்து விட்டாள். அவளுடைய காதலுக்கு இலக்கானவன் **வளாடிமீர்** என்ற வாலிபன்—சேனையில் வேலை பார்த்து, விடுமுறைக் காலத்தில் அந்தச் சிற்றூருக்கு வந்திருப்பவன். போர்க்களத்திற்காக பயிற்சி பல பெற்ற அந்த படைத்தலைவன், மேரியின் கண்பார்வை பட்டு, காதற்களத்தில் வீழ்ந்து விட்டான். காதலர்களின் கண்சிமிட்டலும், புன்முறுவலும் சிறிது காலம் வீட்டாரால் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. பின் மேரியின் பெற்றோருக்குத் தெரிந்து விட்டது. வழக்கமான கண்டிப்புகள் பின் தொடர்ந்தன. வளாடிமீரைப் பார்க்கக் கூடாதென மேரிக்குக் கட்டளையிடப்பட்டது, தங்கள் வீட்டுப்பக்கம் வரக் கூடாதென வளாடிமீருக்குத் தடையுத்தரவு போடப்பட்டது. காதலைத் தடைசெய்ய பெற்றோர்கள் மேற்கொள்ளும் வழக்கமான நடவடிக்கைகளை அவர்கள் செய்தார்கள்.

கட்டளைகள், தடையுத்தரவுகள் இவைகளை மீறி காதல் வளர்ந்தது. மேரி, வளாடிமீர் இருவரிடை தனிப்பட்ட தபால் மார்க்கம் காதல் கடிதங்களைப் பரிமாறியது. மாலை நேரங்களில் மாதாகோயிலுக்குப் பக்கத்திலிருந்த அடர்ந்த சோலையில் இருவரும் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். தங்களுடைய மாருத காதலைப்பற்றி அவர்கள் ஆணைகள் பல இட்டுக் கொண்டனர், காதலுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை எண்ணி எண்ணி கண்ணீருகுத்தனர், கடிதங்கள் எழுதினர், பெருமூச்சுகளை விட்டனர். கடைசியாகக் காதலர்கள் முடிவுக்கு வந்தனர்.

நாமிருவரும் இனிப் பிரிந்து வாழ்வது என்பது நினைக்கமுடியாத காரியம். நாம் ஒன்றுக வாழ, தாய்தந்தையர்கள் மறுக்கிருர்கள். ஆக, தாய்தந்தயரை மீற முற்பட்டாலென்ன ?

இந்த யோசனையை முதலில் வெளியிட்டதுவளாடிமீர்தான். காதல் நாவல்களைப் படித்திருந்த மேரிக்கு அந்த முடிவு பிடித்திருந்தது.

இவர்கள் யோசனை செய்துகொண்டிருக்கும்பொழுது, மாரிக்காலம் வந்துவிட்டது. மாலைநேரங்களில் மழைபெய்யவும், பாதைகளெங்கும் பனிக்கட்டிகள் உறையவும் ஆரம்பமாகிவிட்டன. காதலர்களால் சந்திக்கமுடியவில்லை. இருந்தாலும் கடிதங்கள் அதிகமாக ஆரம்பித்தன. எங்கேயாவது ஓடிப்போவது பற்றி வளாடிமீர் வலியுறுத்தி எழுதிவந்தான். ஓடிப்போய், இரகசியமாகத் திருமணம் செய்துகொள்வது, சிறிதுகாலம் மறைவாக இருந்து, திரும்பிவந்து பெற்றேர்களின் காலடியில் வீழ்ந்து மன்னிப்பு கேட்டால், அவர்களும் காதலர்களின் உறுதியைப் போற்றி மன்னித்து வாழச்செய்வார்கள் என்றெல்லாம் வளாடிமீர் எழுதுவான்.

வளாடிமீர் எழுதுவதைப் படிக்கும்பொழுது மேரிக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும். இருந்தாலும் ஓடிப்போவதற்கு அவள் தயங்கிக்கொண்டே வந்தாள். வளாடிமீர் தனது திட்டங்களைப் பலதடவைகள் மாற்றியமைத்தான். கடைசியாக மேரி ஒத்துக்கொண்டாள். அதன்படி குறிப்பிட்ட நாள் இரவு, மேரி சாப்பிடாமல் தலைவலிப்பதாகச் சொல்லிப் போய் படுத்துக்கொள்வது, பின் வேலைக்காரியின் உதவியால்—காதலரின் திட்டங்களுக்கு வேலைக்காரியும் உடந்தை-மேரி பின்பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு வந்தால் தோட்டத்தில் குதிரைவண்டி தயாராகக் காத்திருக்கும், குதிரை வண்டியில் ஏறி, ஐந்து மைல்களுக்கு அப்பாலிருக்கும் மாதாகோயிலுக்கு வந்துசேர வேண்டும். மற்ற ஏற்பாடுகளைச் செய்துவைத்து வளாடிமீர் அவளுக்காக அங்கு காத்திருப்பான்.

குறிப்பிட்ட நாளைக்கு முதல் நாளிரவு மேரி சரியாகத் தூங்கவேயில்லை. பயணத்துக்கு வேண்டிய துணிமணிகளை யாருக்கும் தெரியாமல் எடுத்து அடக்கம் செய்துகொண்டாள். தன்னுடைய சிநேகிதி ஒருத்திக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதி முடித்தாள். தாய் தந்தையருக்கும் மிகப் பணிவான கடிதமொன்றை எழுதினாள். தன்னுடைய காதலனுடன் போவதைத் தவிர வேறுவழி தனக்கு இல்லையென்றும், திரும்பவந்து பெற்றேரின் காலடியில் அவர்களுடைய மன்னிப்பையும் வாழ்த்துக்களையும் பெறுவதுதான் தனக்குக் கிடைக்கக்கூடிய பெரியதொரு பேறு எனவும் மேரி எழுதியிருந்தாள். அவள் கடிதங்களை எழுதி முடித்து, பெட்டிகளைத் தயாராக வைத்தபொழுது, காலை வெளிச்சம் வர ஆரம்பித்துவிட்டது. இரவு பூராவும் கண்விழித்திருந்த காரணத்தால், துக்கமிகுதியால் அப்படியே மேரி உறங்கிவிட்டாள்.

தூங்கும்பொழுது பயங்கரக் கனவுகள் வந்தன. குதிரை வண்டியில் அமர்ந்து திருமணக்கோலத்துடன் மேரி வேகமாகப் போகிறாள், வழியில் அவளுடைய தந்தை வண்டியைத்தடுத்து, அவளைக் கீழே இறக்கி, இழுத்துப் போடுகிறார். ஆழந்தெரியாத பள்ளத்தில் தலைகீழாக மேரி விழுகிறாள். கீழே புல்தரையில் இரத்தந் தோய்ந்து, வளாடிமீர் படுத்திருக்கிறான். சீக்கிரம் திருமணத்தை முடிக்கும்படி வளாடிமீர் மிகப்பலவீனமான குரலில் இறைஞ்சுகிறான், அவள் கூவுகிறாள்... இப்படி பயங்கரக் கனவுகள் அவள் உள்ளத்தைக் கலக்கின்றன. காலை நெடுநேரமாகிக் கண் விழிக்கும்பொழுது, மேரி வெளுத்த முகத்துடன் காணப்படுகிறாள்.

"ஏன், மேரி, உடம்[...]
மில்லையா?" "தலைவ[...]
ஏன் அப்படி இருக்கிற[...]
என்று தாய் தந்தை[...]
கேட்கிறார்கள். சரியாக [...]
பதாகக் கூறி மேரி தப்பி[...]
கொள்கிறாள். முகமல[...]
யுடன் காரியங்களைக் க[...]
கிறாள்.

மாலை வந்தது, பெற்[...]
களுடன், அந்த வீட்[...]
அவள் பழகுவது அ[...]
தான் கடைசிநாள் என்ற [...]
ணம், இதயத்தில் பெரும்[...]
மாக அழுத்திக்கொண்[...]
இருந்தது. வீட்டிலுள்ள [...]
வொரு பொருளையும் பார்[...]
பொழுது இதுதான் க[...]
தடவை என்று அவள் [...]
விடை பெற்றுக்கொண்[...]
இருந்தது.

இரவுச்சாப்பாட்டு நேரம்[...]
தது. மேரியின் நெஞ்ச[...]
படத்தது. தனக்குத் தல[...]
யாக இருப்பதாக மேரி [...]
லிக் கொண்டு எழுந்[...]
வழக்கம்போல், தாய்தந்[...]
கள் அவள் நெற்றியில் மு[...]
மிட்டு, இரவு வாழ்த்து[...]
சொல்லி, அனுப்பினார்கள்[...]

தனது அறைக்கு வந்[...]
மேரிக்கு அழுகை தாள[...]
வில்லை. நாற்காலியில் அம[...]
படி அழுதாள். வேலைக்[...]
வந்து தைரியஞ்சொல்லி, [...]
லாம் தயாராக இருப்ப[...]
கூறினாள். பெற்றோரை [...]
இந்த வீட்டையும், இளம[...]
வையும் பிரிய, இன்னும் அ[...]
மணி நேரந்தான் இருக்கிற[...]
வெளியில் பனி பெய்து கொ[...]
டிருந்தது, தரையும் [...]
கொடிகளும் பனிக்கட்டி[...]
மூடப்பட்டன, கதவுகளை [...]
கிக்கொண்டு குளிர்கா[...]
அடித்தது. திடுக்கிட்ட [...]
சுடன் மேரி உட்கார்ந்[...]
தாள்.

வீட்டில் விளக்குகள் அ[...]
தன, எல்லோரும் உற[...]
சென்றார்கள். எங்கும் அ[...]
மேரி எழுந்தாள், ஒரு க[...]
போர்வையால் தன்னை ம[...]
துக்கொண்டு, சிறிய பெ[...]
யுடன் மெதுவாகக் கொல்[...]
பக்கம் வெளியே வந்[...]
வேலைக்காரி இரண்டு மூட்[...]
களுடன் பின்தொடர்ந்[...]
தோட்டத்தைக் கடந்[...]
பாதைப்புறம் வந்தார்[...]
அங்கு வளாடிமீர் அனு[...]
குதிரைவண்டி தயாராக [...]
தது. பனியில் குதிரைக[...]
யாக நிற்க முடியாமல் [...]
துக்கொண்டிருந்தன. மூட்[...]
களையும் பெட்டியையும் [...]
டிக்குள் போட்டு, மேரி[...]
வேலைக்காரியும் வண்டியி[...]
ஏறிக்கொண்டார்கள். வ[...]
காரன்முன்னால் அமர்[...]
குதிரைகளைத் தட்டிவிட்[...]
இரவில், குளிரையும் [...]
பெய்த பாதைகளையும் [...]
கிக்கொண்டு வண்டி வே[...]
கச் சென்றது.

மேரி இவ்வாறாகக் கு[...]
வண்டியில் போய்க்கொ[...]
டிருக்கிறாள். மற்றொரு [...]
தில், காதலன் வளா[...]

வானுன் என்று பார்க்க

நாள்காலே நடக்கவேண்
திருமணத்திற்கான ஏற்
ளை வளாடிமீர் முதல்
செய்துகொண்டிருந்தான்.
த்து சிற்றூரிலிருந்த
கோயில் பாதிரியாரை
ன் பார்த்தான். நீண்ட
அவருடன் வாதாடி,
ங்கள் நடத்தியபின், திரு
த்தை நடத்த அவர் ஒப்
ண்டார். பாதிரியின்
த்தைப் பெற்றதும், திரு
துக்கான சாட்சிகளை
க்க வளாடிமீர்
ட்டான். சண்டையில்
பார்த்து, தற்பொழுது
த்தில் தாங்கியிருந்த
ர முதலில் பார்த்தான்.
மிக உற்சாகத்துடன் ஒத்
கொண்டார். அவருடைய
ியால், மற்றொரு சாட்சி
வெகுசுலபத்தில் கிடைத்
இரண்டு சாட்சிகளும்
க்கத்துடன் வளாடி
த் துணைபுரியக் காத்
னர். அந்தத் திரும
த நடத்தி வைக்கத் தங்
ுயிரை வேண்டுமானாலும்
வைக்கத் தயாராக
தாக அவர்கள் அறி
ர்கள். பாதிரியையும்,
களையும் ஏற்பாடு செய்த
து வீட்டுக்கு வளாடி
ந்தான்.

அண்மியதும், மேரி
ற்கு ஒரு குதிரைவண்
அனுப்பி, அந்தக்
வண்டிக்காரனிடம்
வேண்டிய இடம் எல்லா
ும் சொல்லி வைத்
ான். மேரி வீட்டுக்குக்
வண்டியை அனுப்பிய
தான்மட்டும் தனியாக
குதிரைவண்டியில்
ட்டான். அங்கிருந்து
ணமாக இருபது நிமி
பிரயாணஞ் செய்தால்,
ப்பட்ட மாதாகோவி
வந்துவிடலாம்.

காட்டிலே விட்டு வளாடி
வண்டியை வெளியே
டு வந்ததுதான் தாம
டுங்காற்றும் பனிக்கட்டி
காட்டஆரம்பித்தன. எதி
ர்க்க முடியாதபடி பனி
து. வெகு சீக்கிரத்தில்
த பார்வையிலிருந்து
ந்துவிட்டது, சுற்றிலு
த எல்லாப் பொருள்
இருளில் மறைந்து விட்
ஒவ்வொன்றின் மீதும்
கட்டி மூடிக்கிடந்தது.
இருண்டு விட்டது,
தெரியாதபடி பனி
ந்து விட்டது. வளாடிமீர்
ித்தான். அவனுடைய
டி, பாதையை விட்டுப்
எங்கேயோ வயல்களின்
ில் அகப்பட்டுக் கொண்
குதிரையை அதன்
கில் நகர விட்டான். பள்
ில் அகப்பட்டுக் கொள்
பனிக்கட்டியில் மோதி
ும் தெரிந்தன. சரியான
யில் போக, வளாடிமீர்
வளவோ முயன்ருன்.
தயின் அடையாளங்கள்
ம் வரவில்லை. அரை

மணி நேரத்துக்கு மேலாகி விட்டது. ஆனல் அவனுடைய கிராமத்துக்கும் மாதாகோயில் இருக்கும் கிராமத்துக்கும் மத்தியில் இருக்கும் சிறு காட்டை இந்நேரம் சரியான பாதையில் வந்திருந்தால் கடந்திருக்க வேண்டும், இரண்டு மடங்கு நேரத்துக்கு மேலாகியும், அந்தச் சிறிய காட்டுப் பாதை வரவில்லை. வண்டி எங்கோ போய்க்கொண்டிருந்தது வெளியில் பனிக் காற்று நிற்கவில்லை மூடிய வானம் அப்படியே இருந்தது. குதிரை சோர்வடைய ஆரம்பித்தது. பாதி உயரம் பனிக்கட்டிகளின மத்தியில் அது செல்ல வேண்டியிருந்த போதிலும், முகத்தில் வியர்வை அரும்பியது.

கடைசியாக, தவருன திக்கில் போய்க்கொண்டிருக்கிருேமென்ற எண்ணம் வளாடிமீருக்கு உண்டானது. வண்டியை நிறுத்தி, எப்படி வந்தோம், எந்தப் பக்கம் திரும்ப போகவேண்டும் என்றெல்லாம் அவன் யோசித்துப் பார்த்தான். பிறகு வலது கைப்புறம் திருப்பி, ஓட்டினன். குதிரையால் நகர முடியவில்லை. ஒரு மணி நேரமாக அது ஓடி வந்திருக்கிறது. தான் போக வேண்டிய கிராமம் அருகில் தானிருக்கும் என்று மெதுவாகக் குதிரையைத் தள்ளி விட்டான். வண்டி மெதுவாகப் போனது. கால் மணி நேரம், அரை மணி நேரம், வயல்கள் பின்னல் வயல்கள் வந்தபடி இருந்தன. சுற்றிலும் பனிக்கட்டி விழுவது தெரிகிறதே யன்றி, கிராமம் இருப்பது தெரியவில்லை. வண்டியின் சக்கரம் அடிக்கடி அகப்பட்டுக் கொள்வதும், சிலசமயம் பள்ளத்தில் மாட்டி வண்டி கவிழ்ந்துவிடுவதுமாக இருந்தன. வண்டியைச் சரி செய்து வளாடிமீர் மீண்டும் கிளம்புவான். நேரம் போய்க்கொண்டிருந்தது. வளாடிமீரின் கவலை அதிகமாகிக் கொண்டிருந்தது.

கடைசியாக தூரத்தில் அடர்த்தியாக ஒன்று தெரிந்தது. அதை நோக்கி வளாடிமீர் சென்ருன். அது காட்டுப் பாதையின் ஆரம்பம்.

"நல்லவேளை, அருகாமையில் வந்துவிட்டோம்!" என்று வளாடிமீர் உற்சாகமடைந்தான். அடர்ந்த மரங்கள் நிறைந்த அந்தப் பகுதியைக் கடந்தால், அடுத்தது தான் சாத்ரினே கிராமம். திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருந்த கிராமத்தின் பெயர்! தட்டுத்தடுமாறி, பாதையில் வண்டியைக் கொண்டுவந்து வளாடிமீர் சேர்த்துக்கொண்டான். இனிமேல் சுலபமாகப் போய்விடலாம் என்று, பனியைத் தட்டிக்கொண்டு வளாடிமீர் குதிரையைத் தட்டினன். குதிரையும் ஊக்கத்துடன் பாதையில் ஓட ஆரம்பித்தது.

வெகுதூரம் போய்க்கூட, சாத்ரினே கிராமம் வருவதாயில்லை.; காட்டுப்பாதை வளர்ந்துகொண்டே போனது. அப்புறம்தான் ஏதோவொரு காட்டுப்பாதையில் புகுந்து விட்டோமென்ற உணர்வு வளாடிமீருக்கு உண்டானது. மனத்தில் குழப்பமும் ஆத்திரமும் உண்டாயின. குதிரையை நன்ருக அடித்தான். அடிதாளாமல் குதிரை வேகமாக ஓட ஆரம்பித்தது. சிறிது நேரத்தில் அதுவும் சோர்ந்து நடந்தது. பின் தள்ளாடித் தள்ளாடி நகர்ந்தது. வளாடிமீர் என்ன செய்தும் குதிரையை வேகமாகப் போகச்செய்ய முடியவில்லை.

மரங்கள் வரவரக் குறைந்தன. காட்டுப் பாதையை விட்டு, வெளிவந்து விட்டார்கள். ஆனல் சாத்ரினே கிராமம் மட்டும் கண்ணில் படவில்லை. நேரம் நடுநிசி இருக்கலாம். வளாடிமீருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. குதிரை அதன் போக்கில் போய்க்கொண்டிருந்தது. காற்று அடங்கி பனி பெய்வது நின்றது. வானத்தில் மூடியிருந்த மேகக்கூட்டங்கள் கலைந்தன. சற்று தூரத்தில் ஒரு சிற்றூர் இருப்பது தெரிந்தது. அந்தத் திக்கில் வளாடிமீர் வண்டியைச் செலுத்தினன். முதல் குடிசையினருகே வண்டியை நிறுத்தி, கீழிறங்கி, சன்னல் கதவைப் பலமாகத் தட்டினன். கடைசியாக ஒரு கிழவன், கதவை உயர்த்தி "என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"சாத்ரினே இங்கிருந்து எவ்வளவு தூரம்?"

"சாத்ரினே எவ்வளவு தூரமா?"

"ஆமாம். சாத்ரினே இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது. அதிகமான தூரமா?"

கிழவன் யோசித்தான்: "அதிக தூரமில்லை. பதினைந்து மைல்கள் இருக்கும்."

வளாடிமீர் தலையைப் பிடித்துக்கொண்டு நின்ருன்.

"எங்கிருந்து வருகிருய்?" என்று கிழவன் கேட்டான்.

பதில் சொல்ல வளாடிமீருக்குச் சக்தியில்லை.

சிறிது நேரங்கழித்து, திடப்படுத்திக்கொண்டு, "சாத்ரினே போவதற்கு ஒரு குதிரை வாங்கித்தர முடியுமா?" என்று வளாடிமீர் கேட்டான்.

"இங்கு யாரிடமும் குதிரை கிடையாதே!" என்று கிழவன் கையை வீசினன்.

"வழிகாட்ட யாராவது ஒருவரை அனுப்ப முடியுமா?"

"யாரை அனுப்புவது? இரு, என் மகனை அனுப்புகிறேன். அவனுக்கு வழி தெரியும்" என்று கிழவன் உள்ளே போனன்.

வளாடிமீர் காத்திருந்தான். யாரும் வரவில்லை. மீண்டும் கதவைத் தட்டினன். கிழவன் மீண்டும் தன் முகத்தைக் காட்டினன். "என்ன வேண்டும்?"

"நான்தான்! எங்கே உன் மகன்?"

"இதோ! வந்துவிடுவான். உள்ளே வந்து, நெருப்பில் கையை உலர்த்திக்கொண்டு போவதுதானே!"

"வேண்டாம். சீக்கிரம் போகவேண்டும். உன் மகனை உடனே அனுப்பிவை!"

கடைசியாக, ஒரு பையன் வெளிவந்தான். வளாடிமீர் குதிரை வண்டியைப் பூட்டிக் கிளம்பினன், பனிக்கட்டிகளிடை மூடிக்கிடந்த பாதையை அங்குமிங்கும் தேடி, பையன் காட்டிவந்தான்.

"மணி என்ன இருக்கும்?" என்று வளாடிமீர் கேட்டான்.

"பொழுது விடியும் நேரம்!" பையன் பதிலளித்தான். வளாடிமீர் மறு வார்த்தை பேசவில்லை.

கோழி கூவிற்று, காலை வெளிச்சம் பரவிக்கொண்டிருந்தது. சாத்ரினே கிராமத்துக்குள் வளாடிமீர் நுழைந்தான். மாதாகோயில் மூடிக்கிடந்தது. வழிகாட்டிக்குப் பணம் கொடுத்துவிட்டு, பாதிரிவீட்டுக்கு வளாடிமீர் விரைந்து சென்ருன். அங்கு அவன் அனுப்பி வைத்த குதிரை வண்டியையோ, அவனுக்காகக் காத்திருக்க வேண்டிய மற்றவர்களையோ காணேம். அவனுக்குக் காத்திருந்த செய்தி......

மேரி வீட்டில் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம்!

ஒன்றும் நடக்கவில்லை!

காலையில் பெற்ருேர்கள் எழுந்தார்கள், காவ்ரில் எழுந்து

"லட்சாதிபதியான" நாய்

அமெரிக்காவில் ஒரு நாய் லட்சாதிபதியாக ஆகியுள்ளது.

பென்சில்வேனியா மாநிலத்தில் மிஸஸ் ஆர். ஏ. மோரர் என்ற வயோதிகச் சீமாட்டி இறந்ததும், அவருடைய உயில் படிக்கப் பட்டது. அதில்தனது இரண்டரைலட்சம் ரூபாய்பெறுமானசொத்து முழுவதும் "பாபி" என்ற நாய்க்கு எழுதிவைத்துள்ளார். உயில்படி, நாய்க்குத் தனியாக குளிர்ந்த (ஏர்-கண்டிஷன்ட்) அறை, படுக்கை, உணவு, விளையாட தோட்டம் எல்லாம் ஒதுக்கப்பட்டுள்ளன. நாயைப் பராமரிக்க மாதம் 600 ரூபாய் சம்பளத்தில் ஒரு தாதி நியமிக்கப்பட்டிருக்கிருள். நாய் இறந்ததும், சொத்து அந்த சீமாட்டியின் பங்காளிகளுக்குச் சேரும்.

தேநீர் சாப்பட்டதும், மேரி எப்படியிருக்கிருளென்று கேட்டனுப்பினர். வேலைக்காரி திரும்பி வந்து, மேரிக்கு இரவு சரியாகத் தூக்கமில்லையென்றும், இருந்தாலும் இரவு இருந்ததற்கு தற்பொழுது உடல் நலமென்றும் சொன்னுள். சிறிது நேரத்துக்கெல்லாம் கதவு திறந்தது, மேரி உள் வந்தாள்.

"தலைவலி எப்படியிருக்கிறது?" காவ்ரில் கேட்டார்.

"தேவலாம், அப்பா!"

"நேற்றைய தினம் கரிப்புகையின் பக்கத்தில் நின்றதால் தலைவலி வந்திருக்கும்!" என்று மேரியின் அம்மா சொன்னுள்.

"அப்படித்தான் போலிருக்கிறது" என்று மேரி உட்கார்ந்தாள்.

அன்றைய பகற்பொழுது எவ்விதத் தடங்கலுமின்றி கழிந்தது. ஆனல் இரவு வந்ததும், மேரிக்கு காய்ச்சல் கடுமையாக வீசியது. ஆள்போய் பக்கத்து நகரிலிருந்து டாக்டர் வந்தார். டாக்டர் வந்த பொழுது, காய்ச்சல் வேகத்தில் மேரி உளறிக் கொண்டிருந்தாள். இரண்டு வாரம் கடுமையான காய்ச்சல் நீடித்தது. சாவுக்கு அருகாமையில் மேரியின் உயிர் ஊசலாடியது.

மேரி ஓடிப்போனதைப் பற்றி வீட்டிலிருந்த யாருக்கும் தெரியாது. முதல் நாள் அவள் எழுதி வைத்த கடிதங்கள் எரிக்கப்பட்டு விட்டன, வேலைக்காரி எதையும் சொல்லவில்லை. பாதிரியும் சாட்சியாக அமர்த்தப்பட்டிருந்தவர்களும், குதிரைவண்டி ஓட்டிக்கொண்டு போனவனும், எல்லோரும் மிகக் கட்டுப்பாடான அமைதியுடன் இருந்தார்கள். ஒரு கிராமத்தில் ஐந்தாறு பேர்களுக்கு மேல் தெரிந்த ஒன்று, அவ்வளவு இரகசியமாகக் காப்பாற்றப்பட்டது ஆச்சரியமானதுதான்!

காய்ச்சல் அதிகமான பொழுது, மேரி இரகசியத்தைச் சொல்லிவிடுவாள். அவள் சொல்வது ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் இருந்ததால், அவளுடையபெற்றோர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் சொல்லிலிருந்து, வளாடிமீரை அவள் காதலிக்கிருள் என்பது மட்டும் தெரிந்தது. தாயும் தந்தையும் ஒன்று கூடி யோசித்து, மேரி விரும்பிய வளாடிமீருக்கே அவளைக் கல்யாணம் செய்து கொடுத்து விடலாம் என்ற முடிவுக்கு வந்தனர்.

மேரி குணமடைய ஆரம்பித்தாள். வளாடிமீர் அந்த வீட்டுப்பக்கம் வருவதே கிடையாது. திருமணத்திற்குத் தங்களுடைய அனுமதியைத் தெரிவித்து, வளாடிமீரை வரும்படி மேரியின் பெற்றேர்கள் அழைத்தார்கள். வளாடிமீர் அனுப்பிய பதில், அவனுக்குப் பைத்தியமோ என்று எண்ண வேண்டியிருந்தது. தான் இனி அவர்கள் வீட்டில் அடியெடுத்து வைக்கப்போவதில்லை யென்றும், சாவு ஒன்றைத் தவிர தனக்கு நிம்மதி தரத்தக்கது வேறென்றும் இல்லையென்றும் அவன் எழுதியிருந்தான். சிறிது நாட்களுக்கெல்லாம் சண்டைக்கு அவன் புறப்பட்டுப் போய்விட்டதாகச் செய்தி வந்தது.

நீண்ட நாட்களாக, மேரியிடம் பேசுபவர்கள் வளாடிமீரைப் பற்றி எதுவும் சொல்வதில்லை. சண்டையில தீரமாக ஈடுபட்டுப் படுகாயமடைந்தவர்கள் பட்டியல் பத்திரிக்கையில் வெளி வந்தது. அதில் வளாடிமீர் பெயரும் இருந்தது. மேரி அந்தப் பத்திரிக்கையைப் படித்துவிட்டாள். வளாடிமீர் பெயரைப் பார்த்ததும், அவள் மூர்ச்சையானுள். பழையபடி நீண்ட காய்ச்சல் மூண்டு விடுமோ எனப் பயந்தார்கள், நல்ல வேளையாக மூர்ச்சை தெளிந்தது, வேறு காய்ச்சல் வரவில்லை.

சண்டை முடிந்தது, வெற்றி பெற்றுத் திரும்பும் படை வீரர்களை ஊரார் வரவேற்ருர்கள். ஆடம்பரமான வரவேற்புகள், மகிழ்ச்சிகரமான விருந்துகள், விழாக்கள், வாழ்த்துக்கள் எல்லாம் தரப்பட்டன. நாடு பூராவும் அந்த மகிழ்ச்சியொலி பரவியது. சண்டைக்குப் போய்த் திரும்பிய வீரனைச் சூழ்ந்து, ஆரவாரம் அதிகரித்தது. ஊருக்கு ஊர் யாராவது வீரர்கள்-மார்பில் உயர்ந்த பதக்கங்களுடன் திரும்பி வந்தார்கள்.

மேரி தங்கியிருந்த ஊருக்கு போர்மின் என்ற படைத்தலைவன் திரும்பி வந்தான். சண்டையில் காட்டிய திறமைக்காக, வீரப்பதக்கம் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தது. வரும்பொழுது, சண்டையில் ஏற்பட்ட காயம் ஆறுமலிருந்தது. மேரியின் தோட்டத்துக்கு அடுத்த பகுதியில், போர்மினின் வீடும் தோட்டமும் இருந்தன. நாளடைவில், மேரியின் கவனத்தைப் போர்மின் கவர்ந்தான். போர்மின் ஒரு காலத்தில் முரடனுகவும் போக்கிரியாகவும் இருந்ததாகக் கூறினார்கள். ஆனல், மேரியின் முன்னிலையில் மிகப்பண்புடனும் பணிவுடனும் நடந்து கொண்டான். பேசுவது, பழகுவது, படிப்பது, எல்லாவற்றிலும் தனிக்கவர்ச்சியுடன போர்மின் இருந்தான். கரத்தில் கட்டு கட்டி, கழுத்தில் அது மாட்டப் பட்டிருந்தது. போர்மினை மேரிக்கு ஆரம்பமுதலே பிடித்தது. மற்றவர்களை அவள் நடத்துவதற்கும் தன்னை அவள் வரவேற்பதற்கும் வேற்றுமை இருக்கிறதென்பதை போர்மினும் உணர்ந்தான். இருந்தாலும், போர்மின் காதல் பாராட்டி ஏதும் பேசியது கிடையாது. மேரிக்கு அது வேடிக்கையாக இருந்தது. போர்மின் சில சமயங்களில் அவளை ஏறெடுத்துப் பார்ப்பான், அவன் பார்வையில் ஆவல் ஒரு கணம் துள்ளி மறையும். அவன் பேசப் போகிருன் என மேரி காத்திருப்பாள். பின் மங்கிய பார்வையுடன், போர்மின் தன் வீட்டுக்குப் போய்விடுவான்.

போர்மினுக்கும் மேரிக்கும் திருமணம் நடைபெறப் போவதாக ஊரார் பேசிக்கொண்டார்கள். மேரியின் தாய்க்கும் அது ஓரளவு ஆறுதலைத் தந்தது.

ஒருநாள் போர்மின் வந்த பொழுது, மேரி வீட்டிலில்லை. தோட்டத்தில் இருந்தாள். போர்மின் அவளைத்தேடி வந்தான். ஓடையின், ஓரத்தில், புல்தரையில், பூங்கொடி அசைந்தாடும் வளைவில், காவியத்தில்வர்ணிக்கப்படும் காதலியரைப்போல, மேரி வெள்ளையாடையில் அமர்ந்திருந்தாள். போர்மின் போய் அருகில் அமர்ந்தான். ஆரம்பத்தில் சத்தற்ற பேச்சு ஆரம்பித்தது. பின் மேற்செல்லாமல் நின்றுவிட்டது. சிறிதுநேரம் அமைதி நிலவியது.

"நீண்ட நாட்களாக உன்னிடம் ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று காத்திருக்கிறேன்!" போர்மின் தட்டுத்தடுமாறி ஆரம்பித்தான். மேரி நிலத்தைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள். அவன் சொல்வதைக்கேட்க அவள் காத்திருந்தாள்.

"நான் உன்னைக் காதலிக்கிறேன், எந்த அளவுக்கு என்று கூடச் சொல்லமுடியாது..."

மேரியின் கன்னங்கள் சிவந்தன, நாணத்தில் தலை இன்னுங் கவிழ்ந்தது. "நான் தோறும் உன்னைப் பார்க்கவும் பேசவும் எனக்கும் பாக்கியம் கிடைத்தது. இருந்தாலும் இப்பொழுது அது நீண்டதூரத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டது. இனிமேல் உன்னைப் பற்றிய நினைவு, உன்னுடைய அழகிய முகம், என்னை வாட்டி வதைத்தபடி இருக்கும் ஒரு மீளமுடியாததை நமக்கு மத்தியில் இருக்கிறது. அந்த இரகசியத்தை நான் சொல்லியாக வேண்டும்..." அவ்வாறு சொல்லி போர்மின் மூச்சு வாங்கினான்.

"தடை இருக்கிறது. நான் தங்களுடைய மனைவியாக ஆக முடியாது!" என்று மேரி சோகத்துடன் சொன்னுள்.

போர்மின் சொன்னுன். "எனக்குத் தெரியும், காதலித்தவன் இறந்தான் அதற்காக மூன்று ஆண்டுகள் சோகமயமாக இருந்திருக்கிருய். அதற்காக மீண்டும் சோகத்தை வரவழைக்கவேண்டாம். என்னுடன் கடைசி நம்பிக்கை, என் வாழ்வை முழுமையாகச் செய்யும் வலிமை உன்னிடம்தான் இருக்கிறதென்ற எண்ணம்..."

"வேண்டாம், சொல்லாதீர்கள்! என்னல் பொறுத்துக் கொள்ளமுடியாது"

"மேரி, உன்னையடையும் வாய்ப்பு இருந்தும்...என்னைப் போன்ற துர்பாக்கியவான் யாரும் இருக்கமுடியாது ... எனக்கு முன்னமே திருமணமாகிவிட்டது!"

மேரி ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள்!

"ஆமாம், நான்கு ஆண்டுகளுக்கு முன் எனக்குத் திருமணம் நடைபெற்றது. வேடிக்கை என்னவென்றல் என் மனைவியை எனக்குத் தெரியாது. அவள்யார், எங்கிருக்கிருள், அதற்குப்பின்

"1957ல் உலகம் அழிந்துவிடும்" என அமெரிக்காவில் புகழ் பெற்ற ஒரு சோதிடர்—பெயர் ரிச்சர்டு நோபெல் செல்லி—கூறியிருந்தார். அமெரிக்காவில் அந்த சோதிடர் சொல்லியதை வேதவாக்காக நம்பியவர்கள் பலர் இருந்தார்கள். 1957ல் உலகம் முடிவடையப் போவதாகக் கூறிய அவர் 1957ல் முடிவடைந்துவிட்டார்—அதாவது இறந்தார்! 1957 மே 12ல் அவர் இறந்துவிட்டார். அவரைப் பொறுத்தவரை உலகம் 1957ல் முடிந்துவிட்டது!

மேரியின் தந்தை காவ்ரில் இறந்தார். குடும்பத்தின் கணக்கு வழக்குகளும், நிர்வாகமும், மேரியின் தலையில் விழுந்தன. கிராமத்தில் அவ்வளவு சோக எண்ணங்களிடை வாழ நினைப்பின்றி மேரி தன் தாயுடன் வேறொரு புதிய இடத்தில் போய் வாழத் தலைப்பட்டாள்.

பணக்கார வீட்டுப் பெண்-சொத்துடன் இன்னும் மணமாகாமல் இருக்கிருளென்றல், பெண் தேடிப் பலர் வந்தார்கள். மேரியின் தாய்கூட, திருமணப் பேச்சைச் சில சமயங்களில் எடுப்பாள். மேரி தலையசைத்து, சிந்தனையில் ஆழ்ந்துவிடுவாள். வளாடிமீர் உயிரோடு இல்லை. அவன் விட்டுச் சென்ற நினைவுகள் இருந்தன. அவனுடைய புத்தகங்கள், அவனுடைய கையெழுத்து, அவன் உபயோகித்த கவிதைகள், இவை மேரியால் அடிக்கடி படிக்கப்பட்டன. இறந்துபோனவனை நினைத்து மேரி மிக உறுதியுடன் இருப்பதற்காக எல்லோரும் போற்றினர்கள். இருந்தாலும், மேரியின் சோகத்தைக் கலைத்து அவளை மணந்துகொள்ளும் பாக்கியம் பெற்ற மணளன் யார் என்று ஊரார் காத்திருந்தனர்.

...னவாணன் ஒன்றுமே ...க்குத் தெரியாது."

...ரியின் முகத்தில் ஆச்...ரமும், ஆவலும் படர்ந்தன. ...வடிக்கையானதுதான்! ...பிறகுசொல்கிறேன்எங்கே ...னைப்பற்றிச் சொல்லுங் ... என்ன நடந்தது?"

...நான்கு ஆண்டுகளுக்கு ...நடந்தது. சண்டைக்குப் ...ம் வழியில் நான் தங்கி ...தேன். திடீரென்று ...று இரவு பனிப்புயல் ...மானது. அந்த ஊர் ...ரி கிளம்பவேண்டா ...று என்னை அறிவுறுத் .... நானும் அந்த இரவு ...ச்சிற்றூரில் தங்கினேன். ...யல் அடங்குவதா .... மேற்கொண்டு காத் ...மனமின்றி, குதிரை ...பூட்டச் சொல்லி, இர...ரவாகக் கிளம்பினேன். அப்பொழுது அடங்க .... வழியெல்லாம் பனிக் ... உறைந்திருந்தது. ஆற் ...ரைப்பக்கமாகப் போனால் ...வழியாகப் போகலாம் ...று, எனது வேலைக்காரன் ... வண்டியை பாதையை ... வேறு பக்கம் திருப்பிக் ...டான். முன்பின் தெரி ... வெளியில் அகப்பட்டுக் ...ண்டு, எந்தப் பக்கம் ...து என்று தெரியாமல் ...ு நேரம் தத்தளித்தோம். ...மாருன வழிகளில் ...கோ வண்டி போய்க்கொண் ...ந்து. கடைசியாகத் தூரத் ...ஒரு விளக்கு எரிவது ...ந்தது. அதை நோக்கி ...டியை ஓட்டும்படி நான் ...னேன். ஒரு சிற்றூருக் ... நாங்கள் நுழைந்தோம். ... விளக்கு அங்கிருந்த ... கோயிலில் எரிந்து ...ண்டிருந்தது. எங்கள் ...டி அங்கு நுழைந்ததும், ...த வழி! இந்த வழி!' ...று சிலர் வண்டியை நடத் ... சென்றார்கள்.

...ருவர் என் அருகில் வந்து ...ளவு நேரம்காத்திருப்பது ...ணுக்குக்கூட மூர்ச்சை ...ட்டுவிட்டது. பாதிரிக்கு ...ன செய்வது என்று புரிய ...லை. சீக்கிரமாக வாருங்கள்! ...ரம்!' என்று என்னை ...த்துக்கொண்டு போனார். ...க்கு ஒன்றும்புரியவில்லை. ...கோவில் உள்ளே முதல் ...சக் கோடியில் ஒரு பெண் ...கார்ந்திருந்தாள். மற்றொரு ...ள் அவள் நெற்றியைத் ...த்துக் கொண்டிருந்தாள். ...ப்பெண் என்னைப் பார்த் ...ம் 'கடைசியாக வந்துவிட் ..., இறிது நேரத்துக் கெல் ...பெண் மண்ணாகியிருக்கும்' ...ள்.

பாதிரியார் என் அருகில் வந்து 'ஆரம்பிக்கலாமா?' என்று கேட்டார்.

எனக்கு எல்லாம் கனவு மாதிரி இருந்தது. என்ன நடக்கிறது என்றே புரியவில்லை, 'ஓ, ஆரம்பிக்கலாம்' என்றேன்!

மூலையில் உட்கார்ந்திருந்த பெண்ணை அழைத்து வந்து என் பக்கத்தில் நிறுத்தி வைத்தார்கள். பாதிரி மிக அவசரமாக ஏதேதோ சொன்னார். கடைசியாக இருவருக்கும்—எனக்கும் என் பக்கத்திலிருந்த பெண்ணுக்கும் திருமணம் முடிந்து விட்டதாக அவர் அறிவித்தார்.

நான் அசட்டுத்தனத்துடன் திரும்பிப் பார்த்தேன். பெண் கண்ணைவிழித்துப் பார்த்தாள், மிக மிரட்சியுடன் 'இது அவரல்ல! அவரல்ல!' என்று கூச்சலிட்டு மூர்ச்சையானாள்.

சுற்றிலும் இருந்தவர்கள் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். என்ன செய்வது என்று புரியாமல் நான் வெளியே ஓடிவந்து, வண்டிக்குள் தாவி விழுந்து வேகமாக ஓட்டச்சொல்லி, ஊரை விட்டு வெளியேறினேன்."

போர்மின் நிறுத்தினான்.

"அப்படியானால் அந்த மணப்பெண் என்னவானாள் என்று தெரியாதா?" என்று மேரி கேட்டாள்.

"தெரியாது, திருமணம் நடந்த ஊர்பெயர்கூட இன்றளவும் எனக்குத் தெரியவில்லை. அப்பொழுதிருந்த நிலையில், மாதாகோவிலைவிட்டு வெளியே ஓடிவந்து வண்டியில் படுத்த நான் மூன்று நாட்கள் கழித்துதான் கண்விழித்தேன். வண்டியோட்டிவந்த என் வேலைக்காரன் சண்டையில் இறந்து போய்விட்டான். ஆதலால் சண்டை முடிந்தபின், நான் எவ்வளவோ முயற்சியெடுத்தும், நான் திருமணம் செய்துகொண்ட பெண்ணை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் செய்த சிறு தவறு என் வாழ்நாளைச்சோகமாக்கும்வினையாக முடிந்துவிட்டது."

போர்மினின் கரங்களைப் பற்றிய வண்ணம் மேரி, "அட கடவுளே! அது நீங்கள்தானா? என்னை உங்களுக்கு அடையாளந் தெரியவில்லையா?" என்று ஆனந்தத்தால் கூச்சலிட்டாள்.

போர்மினின் முகம் வெளிறிட்டது, உற்றுப் பார்த்தான் அவளைத் தன்னுடன் இறுகச் சேர்த்துக்கொண்டான். ○

உங்களைப்பற்றி

★

நீங்கள் 70 ஆண்டுகள் உயிரோடிருந்தால், அதில் 20 ஆண்டுகள் தூக்கத்தில் கழித்து விடுகிறீர்கள்.

ஆண்டு ஒன்றுக்கு 30 மணி நேரம் கண்ணாடியைப்பார்ப்பதில் செலவழிக்கவேண்டியிருக்கும். (இந்தக்கணக்குப் பொதுவாக ஆண்களைப்பற்றித் தரப்பட்டது. பெண்களுக்கு அதைப்போல ஐந்து அல்லது ஆறுமடங்கு அதிக நேரம் பிடிக்கலாம்.)

மூக்கைச் சிந்துவதில் ஆண்டுக்கு 4மணிநேரம் போகலாம்.

நீங்கள் பிறக்கும்பொழுது, உங்கள் உடம்பில் 270 எலும்புகள் இருக்கின்றன. முதுமையடைந்ததும் 206 எலும்புகள் தாம் இருக்கும். குழந்தைப் பருவத்தில் தனியாக இருக்கும் 64 எலும்புகள் வயது ஆகஆக வேறு பக்கத்து எலும்புகளுடன் ஒட்டிக் கொள்கின்றன.

ஒவ்வொரு நாளும் 23,400 தடவைகள் மூச்சுவிடுகிறீர்கள். அதனால் 438 கனஅடி பருமானமுள்ள காற்று உள்ளே போய் வெளியே வருகிறது. அதாவது 8அடி நீளம் 6அடி அகலம் 9அடி உயரமுள்ள அறையளவு காற்றுக்குக் கொஞ்சம் அதிகமாகும்.

ஒவ்வொருநாளும் சாதாரண நடைமுறை வாழ்வில், 750 சதைப்பகுதிகளை அசைக்க வேண்டியிருக்கிறது.

நாற்பது வயதைக் கடந்ததும், ஆண்டுக்கு கால் அங்குலம் வீதம் உயரம் குறைந்து கொண்டே வரும்.

உங்கள் உடம்பின்மீது 25 லட்சம் கண்ணுக்குத்தெரியாத சிறு துவாரங்கள் இருக்கின்றன. சதுர அங்குலத்துக்கு 3000 சிறு துவாரங்கள் இருக்கும்.

உங்கள் உடம்பிலிருந்து அந்த அளவுப்பொருளை 8... டிகிரி உயர்த்தக்கூடிய வெ...பம் வெளியேறுகிறது.

உங்களுடைய மூளையின் எடை $3\frac{1}{2}$ பவுண்டு இருக்கும். இது சராசரி ஆணினுடைய மூளையின் எடை. பெண்களுக்குச் சராசரியாக மூளையின் எடை 3பவுண்டுக்கு 1அவுன்ஸ் குறைவாக இருக்கும். பெண்ணின் மூளை எடை சிறிது குறைவாயிருக்கிற காரணத்தால், அவர்களுக்குப் புத்திசாலித்தனம் குறைவு என்று அர்த்தமல்ல.

உங்களுடைய உடலிலுள்ள பாசுபரசை எடுத்தால் 2000 ...குச்சிகள் செய்யலாம்.

உங்களுடைய கண்களை மூடித்திறப்பதற்கு ஒருஆண்டு செலவழிக்கும் சக்தியை சேகரித்துவைத்தால், எட்டு வயது பையனை உங்கள் தோள் மீது தூக்கிவைப்பதற்கு தேவையான சக்திக்குச் சமமாகும்.

உங்கள் உடம்பிலுள்ள கொழுப்பை எடுத்தால் ... சோப்புக் கட்டிகள் செய்யலாம்.

உடம்பிலுள்ள தண்ணீர் ... காலன் பீப்பாவை நிரப்பும்.

உடம்பிலுள்ள சுண்ணாம்பு ஒருசிறு அறைக்கு வெள்ளையடிக்கப் போதுமானது, மக்னீசியம் ஒரு கரண்டி உப்பு இருக்கும், கந்தகம் 100வில்லைகள் செய்யஉதவும், இரும்பு இரண்டு அங்குல ஆணிக்குச் சரியாகும், கரி 9000 பென்சில்களுக்குப் போதுமானது.

ஜூலியஸ் சீசர் காலத்துக்குமுன், கேடோ என்பவர் ரோம் அரசியலில் மிக முக்கியமானவராக இருந்தார். கூர்மையான அறிவுக்கும், நல்ல தன்மைக்கும் அவர் பெயர் பெற்றவராயிருந்தார்.

கேட்டோவைப் பார்க்கவந்த ஒருவர் சொன்னார். "ரோம் நகரில் பலருடைய சிலைகள் இருக்கின்றன, உங்களுடைய சிலை இல்லை. உங்களுடைய உருவச்சிலை அமைக்க நான் ஏற்பாடு செய்கிறேன்."

"வேண்டாம், 'கேட்டோவின் சிலை ஏன் இல்லை?' என்று மக்கள் கேட்பது நல்லது, அதைவிட்டு 'கேட்டோவின் சிலை ஏன் இருக்கிறது?' என்று கேட்டுவிடக்கூடாது" என்று கேட்டோ சொன்னார்!

வாத்தியார் வள்ளுவர்!

(ஆரூர் - ஆனந்தன், பி. எஸ்ஸி.)

[வள்ளுவர் பாடஞ் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். தமிழ்நாட்டு அமைச்சர்களும், பிற நாட்டு அமைச்சர்களும் மற்றும் டெல்லி சர்க்கார் அமைச்சர்களும் வகுப்பில் அமர்ந்திருக்கிறார்கள்]

வள்ளுவர்: இந்நாட்டின் அமைச்சர்களே! உங்களைத் தகுதியுடையவர்களாகக் கருதி மக்கள் தேர்ந்தெடுத்துவிட்டார்கள்! இனி எப்படியும் நீங்கள் ஐந்தாண்டுக்கு ஆட்சிபுரிய வேண்டுமல்லவா? அதற்காகவே இந்த வகுப்பு நடத்துகிறேன். இங்கு எல்லா அமைச்சர்களும் வந்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி. அமைச்சர்கள், தங்களுக்கு எழும் சந்தேகங்களைக் கேட்கலாம்!

நேரு: (எழுந்திருந்து) முன்பு நீங்கள சில கேள்விகள் கேட்டு அமைச்சர்கள் தகுதியுடையவர்கள்தானா எனச் சோதனை செய்ய வேண்டுகிறேன்!

வள்ளுவர்: (சிரித்துக்கொண்டே) முதலில் நேரு அமைத்த அமைச்சர் குழுவையே சோதனை செய்கிறேன்! நாடாளும் அமைச்சர்கள் எவைகளில் வல்லவர்களாக இருக்கவேண்டும்? இந்தக் கேள்விக்கு டி. டி. கே. பதில் கூறுவார்!

டி. டி. கே.: ஏராளமான வரிகளை விதிக்கவேண்டும்; பிறகு அவ்வாறு விதிக்கப்பட்ட வரிகளை மிகவும் கவனமாக வசூலிக்கவேண்டும். இங்ஙனம் வசூலித்த வரிப்பணங்களைப் பத்திரமாக வைத்திருந்து அமைச்சர்கள் செலவு செய்துகொள்ள வேண்டும்! இவைகளில் வல்லவர்களே அமைச்சர்களாகத் தகுதியுடையவர்கள்!

வள்ளுவர்: என்னப்பா இது? நீ கூறியவை எந்தக் குறளில் கூறப்பட்டிருக்கிறது?

டி. டி. கே.: ஏன்? "இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு" என்ற குறள் நீங்கள் எழுதியதுதானே?

வள்ளுவர்: அட! மண்டு! என் குறளுக்கு யார் எழுதிய உரையைப் படித்தாய்? ஏன் இப்படித் தத்துப் பித்துன்னு உளறுகிறாய்? அந்தக் குறளுக்கு இது தான் பொருளா? சரியான பொருள் யாருக்காவது தெரிந்தால் எழுந்து நிற்கலாம்! [அமைச்சர்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறார்கள்] ... சுப்பிரமணியம்! நீர் நிதி அமைச்சராயிற்றே! பதில் கூறலாமே!

சுப்பிரமணியம்: (எழுந்து நின்று) டி. டி. கே. கூறியது சரி தான்...சார்! வரி வசூலிப்பது சரியாக வசூலிக்கப்படுகிறதா வென மேற்பார்வையிடவேண்டும். வந்த வரிப் பணங்களைப் போலீஸ் பாதுகாப்பில் வைத்துக் காப்பாற்ற வேண்டும்! அமைச்சர்கள் எல்லோரும் அதைச் சமமாகப் பங்கிட்டுச் செலவிட வேண்டும்! மத்திய அமைச்சர்களுக்கு அதிகச் சம்பளமும் மாநில அமைச்சர்களுக்குக் குறைவான சம்பளமும் கொடுக்கக்கூடாது! இது தான் அதன் சரியான, விளக்கமான பொருள்...சார்!

வள்ளுவர்: எல்லாம் மண்டுகள் இவர்களெல்லாம் ஆமைச்சராகவே தகுதியற்றவர்கள்!

[அப்பொழுது கேரள முதலமைச்சர் நம்பூத்ரிபட் எழுந்திருக்கிறார்]

நம்பூத்ரிபட்: வள்ளுவர் சார்! நான் கூறுகிறேன் சார்!

வள்ளுவர்: சரி! சொல்லு!

நம்பூத்ரிபட்: சார்! அமைச்சர் காப்பாற்றிய பொருளையெல்லாம் பொது மக்களுக்குச் சமமாகப் பங்கிட்டு வழங்க வேண்டும்! சார் எல்லோருக்கும் ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமமாக வழங்கவேண்டும்!

வள்ளுவர்: அட! கேரள அமைச்சர் தேவலாம் போலிருக்கிறதே! நீங்கள் கிட்டத் தட்ட சரியான பொருளைக் கூறிவிட்டீர்கள்! வாங்குகின்ற வரிப்பணங்கள் அமைச்சர்களின் இன்ப வாழ்வுக்காகவும் ஆடம்பர வாழ்வுக்காகவும் அல்லவே அல்ல! மேலும் அமைச்சர்கள் முதன் முதலில் பொருள் வரும் வழிகளை உண்டாக்க வேண்டும்! இல்லாமைப் பிணியை இல்லா தொழித்து நாட்டு மக்களின் வறுமையை விரட்ட வேண்டும்! மேலும் ஆட்சியாளர்களே, தொழில்களை மேற்கொண்டு நடத்தி, அதன் மூலம் பொருள் ஈட்டவேண்டும். அவ்வாறு ஈட்டிய பொருளை, மோசடிக்காரர் களிடமிருந்து பாதுகாத்துப் பிறகு பகிர்ந்தளிக்கவேண்டும். நாடு முழுவதும் வரிவசூலித்து வடநாட்டுக்கே வரிப்பணங்களைச் செலவிடக் கூடாது! தமிழர்களின் வரிப்பணத்தில் இந்தி மொழியை வளர்க்க நினைத்தல் அநியாயத்திலும் அநியாயம்! மக்களின் வரிப்பணத்தை மக்களுக்கே சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டும்! அது மக்களுக்குத் தான் செலவிடப் படுகிறதா அல்லது நடுவில் மோசடிக்காரர்களால் சுரண்டப்படுகிறதா வென்பதை அமைச்சர்கள் கவனிக்கவேண்டும்.

நேரு: ஆனால் எல்லோருக்கும் சமமாக எப்படிப் பகிர்ந்து கொடுப்பது? ஏற்கனவே முன்னேறிய நாடுகளுக்குக் குறைத்துத் தானே வழங்க வேண்டும்! பிற்போக்கான மாநிலங்களுக்கு அதிகமாகத் தானே வழங்க வேண்டும்?

வள்ளுவர்: அது சரி! ஆனால் மிக மிக முன்னேற்றமடைந்த நாட்டையே, பின்னேற்றமடைந்த நாடாகக் கூறி, அதற்கே எல்லா வரிப் பணங்களையும் செலவிடுதல் முறையோ? உதாரணமாக இந்த ஐந்தாண்டு திட்டத்தில் அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, தமிழ் நாடு புறக்கணிக்கப் பட்டு விட்டது! வடநாட்டிலேயே பெரிய பெரிய தொழிற் சாலைகள் கட்டியுள்ளார்கள்! பெரிய பெரிய அணைக்கட்டுகளை கட்டியுள்ளார்கள்! 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது!'' இது 'வரிப்பணம் சரியாகப் பகிர்ந்து கொடுக்கப்படவில்லை' என்பதைத் தானே குறிக்கிறது?

[அப்பொழுது காமராஜர் எழுந்து குறுக்கிட்டுப் பேசுகிறார்.]

காமராஜர்: வள்ளுவர் சார்! நான் வீட்டுக்குப் போக வேண்டும்! முதன் முதலில் முதலமைச்சருக்கு வேண்டிய பண்புகளை மட்டும் சுருக்கமாகக் கூறக் கேட்டுக் கொள்ளுகிறேன்!

வள்ளுவர்: முதன் முதலாக உங்களுக்கு இவ்வளவு அவசரம் கூடாது! வீட்டுக்குப் போய் எதை வெட்டி முறிக்கப் போகிறீர்? உங்கள் வேலைகளையெல்லாம் உங்கள் செயலாளர் தானே செய்கிறார்! கையெழுத்து மட்டும் தானே போடவேண்டும்!

காமராசர்: ஏராளமான கையெழுத்துப் போடவேண்டும்! மேலும் கொள்ளிடம் பாலம் ஒன்றைப் போய்த் திறந்து வைக்கவேண்டும்! எனவே முதலமைச்சருக்கு வேண்டிய பண்புகளை முதலில் கூறிவிட வேண்டுகிறேன்!

வள்ளுவர்: பாராட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்வதும், ஏதாவது திறந்து வைத்துக் கொண்டே இருப்பதும்தான் தங்கள் வேலைபோலும்! சரி! சொல்கிறேன்! மாற்றுக் கட்சிக்காரர்கள் கூறுவதைப் பொறுமையுடன் கேட்டுத் தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்!

காமராஜர்: என்ன? எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுவதை நான் பொறுமையுடன் கேட்கவேண்டுமா? அப்படியானால் எதிர்க்கட்சி அவசியந்தான்போலும்!

வள்ளுவர்: மிகமிக அவசியம்! மேலும் எதிர்க்கட்சிக்காரர்கள் எத்தகைய கடுஞ் சொற்களையும், வசவு மொழிகளையும், காதுவெறுக்கும்படிக் கூறினால் கூடப் பொறுமையாகக் கேட்டுக்கொள்ள வேண்டும்! ஆனால் நீங்கள் இனிய வார்த்தைகளையே பேசவேண்டும்!

காமராஜர்: ஆ! அப்படியா? நான் தெரியாத்தனமாக தி. மு. க. 'கூத்தாடிகள்' என்றும் 'சினிமாக்காரர்கள்' என்றும் 'வாய்ப்பேச்சு வீரர்கள்' என்றும் பலவாறு வைது விட்டேன்! பெரியாரை விட்டுக்கூட வசவு பாணங்களை வீசினேனே!

வள்ளுவர்: முதலமைச்சர் பதவியிலிருந்துகொண்டே நீங்கள் அவ்வாறெல்லாம் தேர்தல் பிரச்சாரம் போனது தவறு! மாற்றுக் கட்சிக்காரர்கள் கூறும் கடுஞ் சொற்களைப் பொறுத்துக்கொள்பவர்கள் ஆட்சியையே மக்கள் விரும்பி. அவரின் ஆணைப் படி நடப்பார்கள்

"செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு"

மேலும் முதலமைச்சர்கள் துணிவுடையவர்களாகவும் அஞ்சாநெஞ்சமுடையவர்களாகவும் இருக்கவேண்டும். மத்திய சர்க்கார் போதிய பணம் கொடுக்காவிட்டால் துணிவுடன் "இது எங்கள் தமிழ் நாட்டிற்குப் போதாது!" என்று எடுத்துக் கூறவேண்டும்,

காமராஜர்: அப்படிக் கூறினால் நான் என் பதவியையும் விட்டு, காங்கிரஸ் கட்சியையும் விட்டு விலக நேரும்!

வள்ளுவர்: எது வந்தாலும் சரி! என்ன நேர்ந்தாலும்சரி! துணிவுடன் எடுத்துச்சொல்லத்தான் வேண்டும்! மேலும் சோம்பித்திரியக்கூடாது. எந்தக் காரியத்தையும் விரைவில் செய்யவேண்டும். எதையும் காலந்தாழ்த்திச் செய்யக்கூடாது. மேலும் முதலமைச்சருக்குக் கல்வி மிகவும் அவசியம்!

காமராஜர்: நான் பள்ளிக்கூடத்தில் பாதிப்படிப்பில் விட்டுவிட்டு வந்து விட்டேன் சார்!

வள்ளுவர்: போனது போகட்டும்! "தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனாள் பவர்க்கு" எனவே, இனியாவது நல்ல நூல்களைப் படியுங்கள்!

காமராஜ்: அதற்காகத்தான் தங்களிடம் வந்தேன்!

வள்ளுவர்: சரி! முதலில் நான் மேலே கூறியவற்றை மட்டும் பின்பற்றி நடக்கக் கற்றுக் கொள்ளுங்கள்! மற்றும் முதலமைச்சருக்கு வேண்டிய பண்புகளை அடுத்தநாள் கூறுகிறேன்! நேரமாகி விட்டது; யாருக்காவது ஏதாவது சந்தேகம் இருந்தால் கேட்கலாம்!

சர்ப்பூர்பட்: மக்கள் பசியாலும் பஞ்சத்தாலும் வாடும் பொழுது மேலும் மேலும் புதுவரிகள் போடுபவர்களை என்னவென்று கூறுவது?

வள்ளுவர்: இதற்கு நான் கூறப் போகும் பதில் டி. டி. கே. உள்ளத்தை புண்படுத்துவதாயிருக்கும்!

டி. டி. கே.: அதனாலென்ன? பரவாயில்லை கூறுங்கள்!

வள்ளுவர்: நீங்கள் இரவு நேரத்தில் தனியாகச் செல்வதாக வைத்துக் கொள்வோம்! அப்பொழுது வேலைத் தாங்கி, உங்களைச் சூழ்ந்து கொண்டு, "உன் மடியிலுள்ளவைகளை எடு! இங்கே கொடு!" என்று மிரட்டிப் பிடுங்கிச் செல்லும் வழிப்பறிக் கொள்ளைக்காரர்களை ஒத்தவரே நண்பர் டி. டி. கே.! அவரைப் போன்று மேலும் மேலும் வரி விதித்து குடிகளை வருத்துபவர்களை "கொள்ளைக்காரர்கள்" என்று, கூறுவதுகூட அவ்வளவு பொருந்தாது! அவர்களைக் கொடிய 'கொலைகாரர்கள்' என்றுதான் கூறவேண்டும்!

"வேலொடு நின்றானிடு
வென்றது போலுங்
கோலொடு நின்றானிரவு"

"கொலை மேற் கொண்டாரிற்
கொடிதே யலைமேற்கொண்
டல்லவை செய்தொழுகும்
வேந்து"

வெங்கட்ராமன்: சார்! மிகவும் நேரமாகிவிட்டது! இன்று இவ்வளவு போதும்! மேலும் டி. டி. கே. முகத்தைப்பார்க்க சகிக்கவில்லை சார்!...(ஒரே சிரிப்பு)

வள்ளுவர்: சரி! அப்பொழுது மற்றவைகளை நாளைக்குப் படிப்போம்!

[எல்லோரும் கலைந்து செல்கிறார்கள்; டி. டி. கே. காமராஜர், சுப்பிரமணியம் இவர்கள் மட்டும் தனியே தலை குனிந்தவாறு செல்கின்றனர்.]

காபியின் தன்மை

உலகத்தில் காபி அருந்துவோர் தொகை அதிகமாகிக் கொண்டே போகிறது. அதிலும் தென்னிந்தியா காபிக்கு பேர் போன இடம். காபி பானத்துக்கு ஆளாகாதவர்கள் தென்னிந்தியாவில் மிகக் குறைந்தவர்களே இருக்கக் கூடும். இங்கு காபி ஒரு "தேசிய பானமாக" ஆகி விட்டது என்று கூறலாம்.

காபி குடிப்பது நல்லதா? கெடுதலா? என்று கேட்கப்படுகிறது. நல்லது அல்லது கெடுதல் என்று எதை வைத்துக் கேட்கப்படுகிறது என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். சிலருக்கு அது கெடுதலாக இருக்கலாம், சிலருக்கு அது வேண்டியதாக இருக்கலாம்.

காபியின் விளைவுகளைப் பற்றி ஆராய்ந்தவர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தருகின்றனர்.

காபியைக் குடித்தால், நீண்ட நேரம் விழித்திருக்க முடிகிறது. காபியைக் குடித்தால் சுகமாகத் தூங்கமுடிகிறது.

காபியைக் குடித்ததும், உற்சாகமாகஇருக்கிறது. காபியைக் குடித்ததும் சிறிது ஓய்வாக இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

காபி அருந்தினால், நன்றாகப் பசியெடுக்கிறது. காபி அருந்தினால் பசி வருவதில்லை.

காபி சாப்பிடுவதால், உணவு சுலபமாக சீரணிக்கிறது, காபியால் சீரணிக்கும் திறன் குறைகிறது.

இவ்வாறு மாறுபட்ட கருத்துக்கள் காபியைப் பற்றி வருகின்றன. டாக்டர்களின் பல சோதனைகள் இந்த இரண்டு பக்கத்துக்கும் ஆதரவான சாட்சிகளைத் தருகின்றன. காரணம், காபியின் விளைவு ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாறுகிறது. மற்றொன்று போடப்படுகிற காபி இடத்துக்கு இடம் மாறுகிறது. காபியின் தரத்தில், ஏறத்தாழ 250 வகைகள் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

காபியில் உற்சாகத்தைத் தருகிற முக்கியமான பொருள் "கபைன்" என்பதாகும். "கபைன்" மூளையையும் இருதயத்தையும் தூண்டிவிடக் கூடிய பொருள். இருதய நோய் உள்ளவர்கள் முன்பெல்லாம் "கபைன்" மாத்திரைகள் வைத்திருப்பார்கள். மூன்று கப் வெறுங் காபியில் உள்ள "கபைன்" சத்து ஒரு மாத்திரையில் இருக்கும். கபைன் அதிகமாகத் தரப்பட்டால், ஆபத்தானதாகும். ஆனால் சாதாரண காபியில் அந்த அளவு 'கபைன்' சேருவதில்லை. 100கப் காபியை எடுத்தால், அதிலிருக்கிற "கபைன்" ஒருவனைக் கொன்றுவிடக் கூடும்.

ஒருகப் காபியில் 90 மிலிகிராம் அளவு கபைன் இருக்கிறது. ஒருகப் தேநீரில் 67மிலிகிராம் கபைன் இருக்கிறது. ஆனால் காபியோ, டீயோ சாப்பிட்டதால் உடனடியாக ஏதும் ஆபத்து நேருவதில்லை.

காபி குடிப்பதால் ஏற்படும் உண்மையான விளைவுகளைவிட "காபி குடித்துவிட்டோம்" என்று நினைக்கிற மனநிலை தான் மிக முக்கியமானதாகக் கருதுகிறார்கள். காபிக் குடித்துப்பழக்கப்பட்டவர்கள், குறிப்பிட்ட நேரத்தில் மிகச் சிறிய அளவில், இரண்டு மடக்கு, காபி கிடைத்தால்கூடபோதும் என்றிருப்பார்கள் சாப்பிடும் அளவு முக்கியமானதாக அப்பொழுது இருப்பதில்லை. பழக்கத்தின் காரணமாக கொஞ்சமாவது சாப்பிட்டால்தான் திருப்தி ஏற்படுகிறது.

காபி சாப்பிட்டால் நன்றாகக் கண் விழிக்கலாம் என்று நினைப்பவர்கள், காபி சாப்பிட்டதும் வெகுநேரம் விழித்து வேலை செய்கிறார்கள். அதே போல், காபி சாப்பிட்டதும் சுகமாகத் தூக்கம் வரும் என்று நம்புகிறவர்கள் காபி சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்குவதுமுண்டு. இது அவரவர்களின் மனப்போக்கைப் பொறுத்திருக்கிறது.

காபியின் விளைவுகளை ஆராய்ச்சி செய்த பொழுது, ஒரு வரையறை தெரிந்தது. கொஞ்சமாகக் காபி சாப்பிட்டதும், சிலர் மிக உற்சாகத்துடன் வேலைகளைச் செய்தார்கள். அவர்களே அதிகமான காபி சாப்பிட்டால் சோம்பலாக மாறிவிட்டார்கள். மேலும் ஒரே அளவு காபி சாப்பிடும் பொழுது, டைப் அடித்தல் போன்ற வேலைகள் நேரம் ஆக ஆக, காபியால் உண்டாகும் சுறுசுறுப்பு குறைந்து வந்தது. கணக்குப் பார்த்தல் போன்ற வேலைகளில், காபியால் வரும் உற்சாகம் சில மணிநேரம் கழித்தபின்தான் வர ஆரம்பிக்கிறதாம். ஆனால் இவ்வாறு காபியால் வரவழைக்கப் படுகிற உற்சாகம், நாளடைவில் உடலுக்கு நல்ல தல்லவென்று சில டாக்டர்கள் கருதுகிறார்கள். காபி அதிகமாக உபயோகப் படுத்தப் படும்பொழுது நரம்புத் தளர்ச்சி உண்டாகக் கூடுமென்று அவர்கள் கூறுகிறார்கள். காபியில் கலந்துள்ள 'கபைன்' இருதயத்தையும் மூளையையும் துரிதப் படுத்தும் தன்மையுடையதால் இரத்த அழுத்த முள்ளவர்கள் அதிகமாகக் காபி குடிக்கக் கூடாதென்று டாக்டர்கள் சொல்வார்கள். சிறிதளவு காபி குடித்தால், கெடுதல் ஒன்றும் விளையாது. ஆனால் மிதமான அளவை மீறினால் காபியினால் பல கோளாறுகள் உண்டாகக் கூடும்.

"கபைன்" குறைக்கப்பட்ட காபியை அமெரிக்காவில் சிலர் சாப்பிடுகிறார்கள். அதாவது சாதாரண காபியில் இருப்பதில் 100 க்கு 97 பங்கு கபைன் பிரிக்கப்பட்டுவிடுகிறது. இந்தக் காபிக்கும், சாதாரண காபிக்கும் அளவையில் வேறுபாடு இருக்கிறது.

நமது நாட்டில் காபி சாப்பிடும் பொழுது, காபித் தண்ணீரைச் சிறிது விட்டு அதில் நிறைய பாலைவிட்டுக் கலந்து சாப்பிடுகிறோம். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், காபி என்றால் காபி மட்டும்தான் இருக்கும். அதில் பால் கலந்து அவர்கள் சாப்பிடுவதில்லை.

காபி தேவையா என்றால், உணவுச் சத்துக்களைப் பொறுத்தவரைத் தேவை என்று கூற முடியாது. ஆனால் பழக்கப் பட்டுவிட்ட காரணத்தால் பலர் விடமுடியாத நிலையிலிருக்கின்றனர். மிதமாகக் குடியுங்கள் என்பதைத் தவிர அவர்களுக்கு வேறொன்றும் சொல்ல முடியாது. 0

நேரத்திற்கேற்ற உடை

நேரத்திற்கேற்ற உடையணிவதன் அவசியத்தைப் பற்றி ஒருவர் வெகுவாகச் சொல்லிக்கொண்டிருந்தார். "நான் விளையாடும்பொழுது கால்சட்டை, பனியன் இவைகளுடன் போகிறேன், வேட்டைக்குப் போனால், குதிரையில் வேகமாகப் போவதற்கான வேட்டை உடையில் போகிறேன். மாலை வேளையில் உலாவப்போனால், அதற்குத் தனி உடையில் செல்கிறேன். விருந்துக்குச் சென்றால் விருந்து உடையில் போகிறேன். என் திருமண நாள் விழா வந்தால், திருமணம் நடந்த அன்று இருந்ததைப் போன்ற உடையிலேயே இருப்பேன்..."

கேட்பவர்களில் ஒருவர் இடைமறுத்து, "பிறந்த நாள் விழாவன்று எப்படி இருப்பீர்கள்?" என்று கேட்டார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த வண்டிகளில் ஏறிக்கொண்டு வழியில் கிடைத்த ஆயுதங்களுடன் புடாபெஸ்ட் நகருக்குள் வரத்தலைப்பட்டனர். போலீசு, இராணுவம் முதலியன அவர்கள் பக்கம் உதவி புரிந்தன. தலைநகரில் மக்கள் ஆரம்பித்த கிளர்ச்சி மேலோங்கி நின்றது. இரகசியப் போலீசுப்படை சின்ன பின்னப் பட்டது.

இரவு 2 மணிக்கு சோவியத் டாங்கிப்படை புடாபெஸ்ட் தலைநகருக்குள் பிரவேசித்தது. அதிலிருந்து ஐந்து நாட்கள் சோவியத் படைக்கும் ஹங்கேரி மக்களுக்கும் கடும் போர் நடைபெற்றது.

ஹங்கேரிய இரகசியப் போலீசு தவிர மற்ற சாதாரண போலீசு மக்களுக்கு உதவியாக இருந்து, ஆயுதங்களைத் தந்து, கூட இருந்து போராடியது. இராணுவம் சீர்குலைந்துவிட்டது, அதிலிருந்த ஒரு சில பகுதிகள் வெளிப்படையாக மக்களுடன் சேர்ந்து போராடியது. முதலில் வந்த ருஷியப் போர் வீரர்கள்கூட தங்களுக்குத்தந்த வேலையில் வெறுப்படைந்து காணப்பட்டார்கள். பின்பு கொண்டுவரப்பட்ட புதுப்படைகள்தாம் கடுமையாகப் போரிட்டன.

அக்டோபர் 25ந் தேதி பாராளுமன்ற கட்டிடத்தின் முன் கூடியிருந்த மக்கள்மீது சோவியத் டாங்கிப்படை சுட்டது. இரத்தக் களறி பயங்கரமான முறையில் நடந்தது. இந்தப் படுகொலை நாட்டை அதிர்ச்சியுறச் செய்தது.

அக்டோபர் 27ந் தேதி இம்ரேநாகி மந்திரிசபை அமைக்கப் போகிறாரென்ற செய்தி, மக்களுக்கு ஆறுதலைக் கொடுத்தது.

அக்டோபர் 29ந் தேதி, இரகசிய போலீசு இலாகாவை நீக்கிவிட்டதாக நாகி அறிவித்தார். மேலும் அக்டோபர் 24ந்தேதிக்குப்பின் நடந்தவைகளை விளக்கி, ருஷிய டாங்கிப்படையை வரும்படி தான் எந்த அழைப்பும் தரவில்லை யென்றும் நாகி கூறினார். நாட்டிலிருந்த பத்திரிக்கைகளும், எல்லா திறப்பட்டவர்களும், இம்ரே நாகியுடன் ஒத்துழைத்து, நாட்டில் அமைதியை நிலைநாட்டப்பாடுபட்டனர். ஹங்கேரிய நாடு நடுநிலைமை வகிக்குமென்றும் எந்தப் பக்கமும் சேராதென்றும், நவம்பர் 3ந்தேதிக்குப் பின் சோவியத் படைகள் ஹங்கேரி நாட்டிலிருந்து வெளியேறி விடுமென்றும் அறிவிக்கப்பட்டது, அவ்வாறு வெளியேறுவதைப்பற்றி விவாதிக்க ருஷிய இராணுவ அதிகாரியின் விருந்து அழைப்பின் பேரில் நான்கு ஹங்கேரிய பிரதிநிதிகள் சென்றார்கள், விருந்தின் மத்தியில் ருஷிய பாதுகாப்புப் போலீசு உள் நுழைந்து நான்கு ஹங்கேரியப் பிரதிநிதிகளையும் கைதுசெய்து கொண்டு போய்விட்டார்கள்.

இதற்குப் பிறகு பலமான அணிவகுப்புடன் சோவியத் படை புடாபெஸ்ட் நகருக்குள் புகுந்து ஆகாயவிமான நிலையங்கள், இரயில் பாதைகள், முக்கிய இடங்கள் எல்லாவற்றையும் தம் வசமாக்கிக் கொண்டது.

ருஷியப் படைகளை எதிர்க்க வேண்டாமென்று நாகி அறிவித்தார். ருஷியப் படைகள் வெளியேறுவதற்கான பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடியுமென அவர் நம்பியதாகத் தெரிகிறது. இந்தச் சமயத்தில் காதர் தலைமையில் மற்றொரு அரசாங்கம் நிறுவப்பட்டதாகச் செய்தி வந்தது. இதற்குபின், ருஷியப் படைகளை எதிர்த்துப் போராடுவதென நாகி அரசாங்கம் தீர்மானித்தது. காதர் நவம்பர் 7ந் தேதிக்குப்பின்தான் புடாபெஸ்ட் நகரில் மக்கள்முன் வந்தார்கள். ஹங்கேரிய அரசாங்க நிர்வாகம் முழுவதும் சோவியத் இராணுவ ஆதிக்கத்தின் கீழ் சென்றுவிட்டது. இரகசிய இராணுவப்போலீசை சேர்ந்த ஒருசிலரைத் தவிர, ஹங்கேரிய மக்களில் எவரும் ருஷியப் படைகளுக்கு உதவியாக இருக்கவில்லை.

இம்ரே நாகி எங்கு இருக்கிறாரென்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. முதலில் யூகோஸ்லேவியா தூதராலயத்தில் அவர் அடைக்கலம் புகுந்தாரென்றும், அங்கிருந்து ருஷியப் படையினரால் கடத்திச் செல்லப்பட்டாரென்றும் கூறப்படுகிறது"

இவ்வாறாக மிக நீண்ட அறிக்கை ஒற்றை விசாரணைக் குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

ஹங்கேரிய மக்கள் எழுச்சியையும், சோவியத் பட்டாளத்தின் வரவால் அது அடக்கப்பட்டத்தைக் கூறும்பொழுதும், ஏகாதிபத்திய தாசர்களின் கூற்று எனவோ, கம்யூனிச எதிரிகளின் கட்டுப்பாடான பொய்ப்பிரசாரம் எனவோ அவற்றை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனென்றால் மேற்கு ஐரோப்பாவையும் இங்கிலாந்தையும் சேர்ந்த சில கம்யூனிசுட்களும், தொழிலாளர் தலைவர்களும் ஹங்கேரியில் ருஷியப் படைகள் தலையிட்டதைக் கண்டித்துப் பேசியுள்ளார்கள். அதற்காக அவர்களெல்லாம் ஏகாதிபத்திய தாசர்களெனக் கூறிவிட முடியாது.

இத்தாலி நாட்டில் கம்யூனிசுட்களுடன் நீண்ட காலமாக ஒத்துழைத்தவரும், சோஷியலிசுட் கட்சியின் தலைவர்களில் ஒருவராகவும் விளங்குகிற பீட்ரோ நென்னி என்பவர் ஹங்கேரியில் சோவியத் தலையிட்டதைக் கண்டித்துள்ளார். அதற்காக அவரை ஏகாதிபத்திய தாசர், கம்யூனிச விரோதி, சமாதான துரோகி என்று கூறிவிட முடியாது. ஸ்டாலின் சமாதானப் பரிசு பெற்றவர்களில் அவரும் ஒருவர்.

"ஹங்கேரியர்களுக்கு எதிராக சோவியத் தலையிட்டது மிகக் கேடான தவறு. அது மக்களின் கோபத்தைத் தூண்டி, ஒருமித்து திடீரென மூளும் கிளர்ச்சியில் கொண்டு போய் விட்டது!" என்று யூகோஸ்லேவியா தலைவர் டிட்டோ கூறினார். அவரைக் கம்யூனிச விரோதி எனக் கூறிவிட முடியாது. அவருடைய யூகோஸ்லேவியா கம்யூனிச முறையில் அமைக்கப்பட்டது தான்.

ஹங்கேரியில் ருஷியா நடந்துகொண்டது சரியல்ல என்று கூறுவதால், உடனே கம்யூனிசத்துக்கு எதிராக, முதலாளித்துவத்திற்கு ஆதரவாக எழுப்பப்படும் கூச்சலாக எடுத்துக்கொள்ள முடியாது. மக்களின் கிளர்ச்சியை இராணுவ பலத்தால் நசுக்கிவிடும் கொடுமை, அது எதன் பேரில் நடந்தாலும் சரி, முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தால் நடந்தாலும் கம்யூனிச ஏகாதிபத்தியத்தால் நடந்தாலும் அது கண்டிக்கப்படவேண்டியதே.

கம்யூனிச முறையில் அரசாங்கம் இருக்கவேண்டுமா, முதலாளித்துவ முறையில் அரசாங்கம் இருக்கவேண்டுமா என்ற பிரச்சினையில் அங்கு கிளர்ச்சி ஆரம்பமாகவில்லை. இப்பொழுதுள்ள அரசியல் அடிப்படை மாற்றப்பட்டு, பத்து ஆண்டு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த முதாளித்துவ முறையைத் திரும்பிக் கொண்டுவர வேண்டும் என்று ஹங்கேரிய மக்கள் போராடியதாகக் கூறப்படவில்லை. வெளியார் தலையீடு இருப்பதை அவர்கள் விரும்பவில்லை என்பது மட்டும் தெரிகிறது. ஹங்கேரி கிளர்ச்சிக்குச்சில நாட்களுக்கு முன்னதாக கோல்முகாவின் தலைமையில் போலந்து மக்கள் ருஷியப் பிடியைத்தளர்த்தி சில உரிமைகளைப் பெற்றது, ஹங்கேரி நாட்டில் புதிய நம்பிக்கைகளை உண்டாக்கியிருக்கக்கூடும். ஆக ஹங்கேரி மக்கள் கிளர்ச்சியைப் பார்க்கும்பொழுது, வேறு அர்த்தங்களை அதற்குக் கற்பிப்பதைவிட்டு, ஒருநாட்டில் மற்றொரு நாட்டு இராணுவபலம் தலையிட்டு மக்களை அடக்க முற்படுவது சரியா என்பதைக் கவனிக்கவேண்டும். ஹங்கேரி நாட்டில் கிளர்ச்சி ஏதும் நடைபெறவில்லை, சோவியத் இராணுவம் அங்கு செல்லவே இல்லை என்று ஒரேயடியாக எல்லாம் மறுக்கப்பட்டன. நடந்த குற்றத்தை மற்ற குற்றங்களைக் காட்டி மறைத்துவிட முடியாது. ஒரு குற்றம் மற்றொரு குற்றத்துக்குச் சமாதானம் ஆகாததுபோல், ஆங்கிலோ-பிரெஞ்சு ஆதிக்கங்கள் வேறொரு நாட்டில் தலையிட்டால் எவ்வளவு கண்டிக்கப்படுவதற்கு உரியதோ, அந்த அளவு கண்டிக்கப்பட வேண்டியதே ருஷிய ஆதிக்கம் வேறொரு நாட்டில் தலையிட்டது என்றால்! "ஹங்கேரியர்களுக்கு எதிராக ருஷியா ஈடுபட்டது மிகக்கேடான தவறே!" என்று யூகோஸ்லேவியா கம்யூனிசுட் தலைவர் மார்ஷல் டிட்டோ கூறியிருக்கிறார். ஆக மறைக்க முடியாத மாபெரும் குற்றம் ஒன்றை ஹங்கேரி மக்கள் கிளர்ச்சியை அடக்கிய வெளிநாட்டு இராணுவ பலம் செய்துள்ளது. இது ஜனநாயக ஆட்சியில் நம்பிக்கையுள்ள அனைவராலும் கண்டிக்கப்பட வேண்டிய தொன்றாகும். ○

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மன்னனின் பிரதிநிதி வரும்பொழுது கதவை அடைத்துவிடும் பழக்கம் இங்கிலாந்து பாராளு மன்றத்தில் இன்றும் நடைபெறுகிறது. இந்தச் சம்பிரதாயம் புதிதாகப் பார்ப்பவர்களுக்கு வேடிக்கையாக இருந்தாலும் பாராளுமன்றத்திற்குள் மன்னனோ, மன்னனின் பிரதிநிதியோ நுழையக்கூடாது என்ற தடையை வலியுறுத்த அவ்வாறு செய்யப்படுகிறது. ○

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	...		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

அரசாங்கச் செலவில் 2000 கார்கள்!

—(0)—

அதற்காக ஆண்டுதோறும் 40லட்சம் ரூபாய் செலவாகிறது

—0—

சிக்கனத்தை உபதேசிக்கும் ஆளவந்தார்களால் அந்தச் செலவைத் தவிர்க்க முடியவில்லை.

—(0)—

அரசாங்கத்தின் வீண்செலவுகள் சுட்டிக்காட்டப்பட்ட நேரத்தில், சிக்கனத்தை இனிமேல் கையாளப் போவதாகவும் அதற்காக ஒவ்வொரு மந்திரி இலாகாவுக்கும் ஒரு புது அமைப்பும் உண்டாக்கப்போவதாக நிதிமந்திரி அறிவித்தார். சிக்கனத்தைப் பற்றி பிரதம மந்திரி பேச, அதற்கடுத்த பெரிய மந்திரி தன் கீழுள்ள உதவி மந்திரியைக் கூப்பிட்டுச் சொல்ல, உதவி மந்திரி தனது இலாகா செக்ரட்டரியைக் கூப்பிட்டுச் சொல்ல, சிக்கனத்தின் அவசியத்தைப்பற்றி செக்ரட்டரி தனக்குப் பக்கத்திலுள்ள ஜாயின்ட் செக்ரட்டரியிடம் சொல்ல, ஜாயின்ட் செகரட்டரி டெபுடி செகரட்டரிகளுக்கு உபதேசிக்க, டெபுடி செகரட்டரிகள் அண்டர் செகரட்டரிகளுக்கு அறிவுறுத்த, அண்டர்செகரட்டரிகள் அசிஸ்டெண்ட் செகரட்டரிகளுடன் பேச, அசிஸ்டெண்ட் செகரட்டரிகள் செக்ஷன் ஆபிசர்களுக்குக் கட்டளையிட, செக்ஷன் ஆபிசர்கள் சூப்பிரின்டென்டுகளுக்கு உத்தரவிட, சூப்பிரிண்டென்டுகள் தங்கள் கீழ் வேலை செய்யும் கிளார்க்குகளுக்குச் சொல்ல, கிளார்க்குகள் டபேதாருக்குச் சொல்ல, டபேதார்கள் பியூன்களுக்குச் சொல்ல, பியூன்கள் தங்களுக்குக் கீழாக வேறுயாரும் இல்லாத காரணத்தால் "சிக்கனமாக இல்லாமல் வேறு எப்படி இருக்கிறோம்?" என்று தலையைத் தடவிக் கொண்டு யோசிக்க, இப்படி அரசாங்க நிர்வாகத்தில் "சிக்கனம்" என்ற சொல் அடிபட்டு வருகிறது.

சிக்கனம் செய்ய என்ன வழிவகைகள் என்று கண்டறிந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு பார்ப்பதற்கு எவ்வளவு செலவாகப் போகிறதோ தெரியவில்லை.

சிக்கனமாக இருக்கவேண்டும் ஆடம்பரம் குறைய வேண்டும் என்று ஆரம்பித்து, இனிமேல் மந்திரிகள் தங்கள் கார்களில் அரசாங்கக் கொடியை எந்தச் சமயங்களில் பறக்கவிடலாம் என்பது பற்றி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் ஆடம்பரத்தைப்பற்றிப் பேச்சு வருகிறநேரத்திலெல்லாம், மந்திரிகள் வைத்திருக்கிற கார்கள் தாம் கவனத்துக்கு வந்தன. ஏன் புதுக்கார்கள் வாங்கப்பட்டன, இவ்வளவு அதிக விலையில் ஏராளமான கார்கள் எதற்காக என்றெல்லாம் பேசப்பட்டன.

மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் உண்மையில் சிக்கனமாக இருக்க விரும்பினால், அரசாங்கச் செலவில் பராமரிக்கப்படும் கார்களைக் கட்டுப்படுத்தினாலே போதுமானது, உதாரணமாக **உத்தரப் பிரதேச மாநிலத்தில் மட்டும், அரசாங்க அதிகாரிகளின் உபயோகத்திற்காக 2000 அரசாங்கக் கார்கள் இருக்கின்றன. அந்த 2000 கார்களும் அரசாங்கத்தால் வாங்கப் பட்டவை, அரசாங்கச் செலவில் ஓடிக்கொண்டிருப்பவை, அந்தக் கார்களை வாங்க, மூன்றிலிருந்து நான்குகோடி ரூபாய்கள் முதலில் செலவாகியிருக்கும். பின்னால் அந்தக் கார்களுக்காக ஆண்டுதோறும் 40 லட்சம் ரூபாய்கள் செலவாகிறது.**

1947க்கு முன் அரசாங்கச் செலவில் இவ்வளவு கார்கள் கிடையாதாம். வரவர ஒவ்வொரு அதிகாரியாக ஒவ்வொரு இலாகாவாக அரசாங்கச் செலவில் கார்கள் வாங்கி வைக்கத் தலைப்பட்டனர். இப்பொழுது 2000 கார்கள் அரசாங்கச் செலவில் அங்கு இருக்கின்றன.

சிக்கனம் என்ற பேச்சு வந்ததும், அந்த 2000 கார்கள் கொண்ட படையைத் தவிர்க்க வேண்டும் என்ற யோசனையை ஒருவர் சொன்னாராம். அதனால் 40 லட்ச ரூபாய் மக்களின் வரிப்பணம் மிச்சமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் பரிசிலனை செய்தபிறகு அரசாங்கம் அந்த யோசனையைக் கைவிட்டு விட்டதாம். என்ன காரணம் தரப்பட்டது தெரியுமோ? "அரசாங்க அதிகாரிகள் அந்த யோசனைக்கு ஒத்துக்கொள்ளவில்லை." என்பதுதான்! ●

(1-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்றால், மீண்டும் மந்திரியாக வருவார்; தோல்வியடைந்தால் அவர் கவர்னராக உயர்த்தப்பட்டுவிடுகிறார். ஆக வெற்றி பெற்றால் மந்திரி, தோல்வியடைந்தால் கவர்னர் வேலை! காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் எப்பொழுதும் கவலைப்படத் தேவையில்லை, வெற்றி பெற்றாலும் ஒரு பதவி கிடைக்கும், தோல்வியடைந்தால் அதைவிட உயர்ந்த பதவி கிடைக்கும்.

1952ல் நடந்த பொதுத்தேர்தலில் தோல்வியடைந்த சில காங்கிரசுப் பிரமுகர்கள் கவர்னர்களாக உயர்த்தப்பட்டார்கள். மாயவரம் தொகுதியில் **கே. சந்தானம்** தோல்வியடைந்தார்; ஆனால் இமாசலம் பிரதேசத்தில் கவனர் பதவி அவருக்குத் தரப்பட்டது. இப்பொழுது நிதிக்குழுவின் தலைவராகப் பணியாற்றுகிறார்.

1957ல் நடந்த பொதுத்தேர்தலில், பாராளுமன்றத்திற்கு நின்று தோல்வியடைந்தவர்களில் **வி. வி. கிரி.** அவர்களும் ஒருவர். பொதுத்தேர்தலில் தோல்விகண்ட அவர், பின்பு உத்தரப்பிரதேசத்திற்குக் கவர்னராக நியமிக்கப் பட்டுள்ளார். அவரைப்போல்மற்றொரு மாநிலத்துக்கு கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளவர் **படாஸ்கர்** அவர்கள். அவர் யார் என்று பார்த்தால், அவரும் பொதுத்தேர்தலில் காங்கிரசு சார்பில் நின்று தோல்வியடைந்தவர். தேர்தலில் காங்கிரசு சார்பாக நின்று சிலர் தோல்வியடைகிறார்கள். பின்பு பார்த்தால், கவர்னர்கள் பட்டியலில் அவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

காங்கிரசுப் பிரமுகர் ஒருவர் தோல்வி யடைகிறு ரென்றால், கவர்னர் வேலை தரப்பட்டுவிடுகிறது, கவர்னர் வேலை காலி இல்லை என்றால் ஏதாவது ஒரு பெரிய பதவி உண்டாக்கப் பட்டாவது அவர்களுக்குத் தரப்படுகிறது. **ஜே. கே. பான் சலே** என்பவர் முன்பு இந்திய அரசாங்கத்தில் உதவி மந்திரியாக இருந்தார். பொதுத்தேர்தலில் காங்கிரசு சார்பாக மராட்டியப் பகுதியில் நின்றார், தேர்தல் முடிவு அவருக்குத் தோல்வியைக் காட்டியது. ஆனால் ஆளுங்கட்சியினருக்கு வேண்டியவராக இருந்த காரணத்தால், அவர் தோல்வியில் தனியே விடப்படவில்லை. மத்திய கல்வி இலாகாவில், "தேசிய ஒழுக்கத் திட்டத்தலைவர்" என ஒரு புதுப் பதவி உண்டாக்கி அவருக்குத் தரப்பட்டுள்ளது. கல்வி கற்பவர்களிடையில் ஒழுங்கு உண்டாக்குவதற்குத் திட்டமிடுவதற்

காக ஒரு பதவி! அவர் வேலை
எப்படி ஒழுங்கைக் கொண்
வரலாம் என்று திட்டங்க
போடுவது! பதவிக்காகக் கூட
ஆட்கள் தேடவில்லை, ஆட்
களுக்காகப் பதவிகள் தேட
படுகின்றன!

ஜனநாயகம் கேலிக்கூத்தா
கப்படும் வகையில் புதிய கவ
னர்கள் நியமிக்கப்பட்டுள்ள
னர். தேர்தலில் தோல்வி
யடைந்த கிரி ஒரு மாநிலத்
துக்கு கவர்னராக நியமிக்கப்
படுகிறார், தேர்தலில் தோல்வி
யடைந்த படாஸ்கர் மற்றொரு
மாநிலத்துக்குக் கவர்னராக
போகிறார். கிரியோ, படாஸ்
கரோ தனிப்பட்ட முறையில்
திறமைசாலிகளாக இருக்
லாம். கவர்னர் பதவிக்கு ஏற்
றவர்களாகக் கருதப்பட்டிரு
கலாம். அவர்கள் கவர்ன
பதவிக்கு ஏற்றவர்கள் என்
எண்ணம் ஆளுங்கட்சிக்கும்
அரசாங்கத்திற்கும் உண்மை
யாகவே இருந்திருந்தால், தேர்
தலில் அவர்களை ஈடுபடாம
செய்திருக்கலாம். ஆனால் தே
தலில் அவர்களை ஈடுபட
செய்து, வெற்றி தோல்விகளை
பார்த்து, வெற்றியடைந்தா
ஒரு பதவி, தோல்வியடை
தால் மற்றொரு பதவி என்
தருவது, ஏதோ கடைவீதியி
நின்றுகுலுக்குச்சீட்டுப்போட்
"ஒற்றையா, இரட்டையா
என்று பார்ப்பதுபோலா
விடுகிறது. பொதுத்தேர்த
அடுத்து புதுக்கவர்னர்கள் நி
மிக்கப்படும் நேரம் வந்
அதில் தோற்றுப் போனவ
களுக்குக் கவர்னர் பத
அளிப்பதானது, அவரை
தோற்கடித்த தொகுதி வா
காளர்களை கேலி செய்வ
போலிருக்கிறது. மேலும் தே
தலில் தொல்வியுற்ற ஒரு
ரைக் கொண்டுபோய் ஒரு மா
லத்தில் கவர்னராகப் போடு
பொழுது, வெற்றிபெற்ற பிர
நிதிகளுக்கு மேலாகத் தோல்
யடைந்த ஒருவரைக் கொண்
போய் உட்காரவைத்து வி
கிறார்கள். தோற்வியுற்றவுட
அவர் அரசியலுக்கு அருகதை
யற்றவராகி விடுகிறாரென்
திறமையற்றவராகி விடுகி
ரென்றோ கூறவில்லை. ஆன
வெற்றி யடைந்தால் மந்தி
பதவிக்கு எதிர்பார்க்கப்ப
பிரமுகர்கள் தோல்வியடை
தால் கவர்னர் பதவியி
அமர்த்தப்படுவது, ஜன
யகத் தேர்தல் முறை
யைக் கேலி செய்வதாகிற
ஏதாவது பதவி தந்த
வேண்டுமென்ற நிலையில், பு
பதவிப் பரம்பரையை — ஆ
கட்சியினருக்குவேண்டியபிர
பட்டாளத்தை அரசாங்
உண்டாக்குகிறது. மந்தி
பதவிகளின் அடுத்த வா
படியாக கவர்னர் பதவி ஆ
அரசியல் சதுரங்கத்தி
ஆளுங்கட்சினரின் காய்களா
கவர்னர்கள் ஆக்கப்பட்டு
கின்றனர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம்
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண்: 55